பக்கங்கள் 12 விலை சதம் 15

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.

மலர் 1 | 2-7-61 ஞாயிறு | இதழ் 3

## பத்மினி திரும்பவும் வருவார்?



பிரபல சினிமா நடிகை பத்மினி சமீபத்தில் இல்லறவாழ்வை மேற்கொண்டது அனைவருக்கும் தெரியும் திரையுலகை விட்டு அறவே அவர் நீங்கிவிட்டாரென்று எல்லாப் பத்திரிகைகளும் ஒரேயடியாக எழுதித் தீர்த்து விட்டன! ஆனால் சென்னையிலிருந்து எமக்குக் கிடைத்த ஒரு பிரத்தியேக செய்தியின்படி பத்மினி மறுபடியும் திரையுலகுக்கு நிச்சயம் வருவாரென்று எதிர்பார்க்கலாம். அவர் திரும்பி வருவது உடனடியாக நடைபெறாவிட்டாலும் வரவேண்டிய நிர்ப்பந்தங்கள் சில உண்டென்பதும், ஓரளவு அவருக்கும் திரும்பி வருவதற்கு ஆவல் உண்டென்றும் நம்பிக்கையான செய்தி தெரிவிக்கிறது.

# போ. வ. மந்திரி பொறுப்பை ஏற்பரா?

## புகையிரத 'ஓவலோட்' — மிருகத்தனமானது!

**இ. போ. ச. பஸ்களினால் தீர்க்கமுடியாத பொதுமக்களின் பிரயாண நெருக்கடியை தனிப்பட்டவர்களின் 'வான்' சேவை ஓரளவு தீர்த்து வந்ததும் அதை முறியடிப்பதற்காக ஏழுபேர்களுக்குமேல் 'வான்'களில் ஏற்றக்கூடாதென்று அரசாங்கம் சட்டம் கொண்டு வந்ததும் வாசகர்களுக்குத் தெரியும்.**

அரசாங்கத்தின் செல்லப் பிள்ளையான இ. போ. ச. பஸ்களுக்கு இந்தச் சட்டம் வெறும் கண்துடைப்பாகவே இருக்கிறது.

ஆனால் அரசாங்கத்தின் சொந்தப் பிள்ளையான ரயில்வேதான் 'ஓவலோட்' ஏற்றுவதைத் தனது ஏகபோக உரிமையாக வைத்துக்கொண்டிருக்கிறது!

சென்றவாரம் போசன் பண்டிகைத் தினத்தில் கொழும்பிலிருந்து பிரயாணஞ் செய்த ரயில் பிரயாணிகள், ஆடு மாடுகளைப் பட்டியில் அடைத்ததைவிட படுமோசமான நிலையில் நடத்தப்பட்டதை எமது நிருபர் நேரடியாகப் பார்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

இரண்டாம் வகுப்புப் பிரயாணிகள், மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் என்ற வித்தியாசமின்றி எல்லா வகுப்புக்களுமே ஒன்றாகி நிரம்பி வழிந்து கொண்டிருந்தனவாம்! இரண்டாம் வகுப்புப் பெட்டியிலேயே பிரயாணிகள் இருக்கவும் இடமின்றி நிற்கவும் இடமின்றி நெரிபட்டனர்;. குழந்தைகள், குமர்ப் பெண்கள், கிழவர்கள் எல்லோருமே இந்தக் கும்பலில் கிடந்து நசுங்கிய காட்சி மிகப்பரிதாபமாக இருந்தது' என்று எமது நிருபர் குறிப்பிட்டிருக்கிறார்.

''இப்படி மிருகத்தனமான முறையில் புகையிரதப்பகுதி நடந்துகொள்வதற்கு ஒரு முடிவு ஏற்படாதா? இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள், நோய்கள், காலதாமதங்கள் முதலியவைகள் அரசாங்கத்துக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லையா? இத்தகைய சந்தர்ப்பத்தில் தற்செயலாக ஒரு விபத்து நடந்திருந்தால்—அதனால் ஏற்படும் அளவற்ற உயிர்ச் சேதத்துக்கு கனம் போக்குவரத்து மந்திரி பொறுப்பாக இருப்பாரா?'' என்று ஒரு பிரயாணி நமது நிருபரிடம் அபிப்பிராயம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.


## செயற்கைக் கள் உற்பத்தி!

சாராயத்தில் கலக்கப்படும் கசிப்பு பற்றி தென்னிலங்கையிலிருந்து கலக்கலப்பான செய்திகள் வெளியாவதைக் கண்டு யாழ்ப்பாணத்துக் கலவைக் கள் வியாபாரிகள் சங்கம் கவலை தெரிவித்துள்ளது. தாங்கள் பல்லாண்டுகளாகக் கையாண்டுவரும்கசிப்புபற்றி யாரும் கண்ணெடுத்துக் கூடப் பார்க்கவில்லையே என்பதுதான் இந்தக்கவலைக்குக் காரணமாகும்.

பச்சையரிசி ஊறப்போட்ட தண்ணீர், ஊமத்தைஇலைச்சாறு, வெள்ளைச்சீனி முதலான மூலப்பொருட்கள் இருக்கும் வரை பனையாவது தென்னையாவது என்று மேற்படி சங்க முக்கிய நிர்வாகியொருவர் செயற்கைக் கள் தயாரிக்கும் முறையைப் பத்திரிகை நிருபர்களிடம் சூக்குமமாக வெளியிட்டார்'

**மீசை நரைச்சுப்போச்சே! — கிழவா ஆசை நரைக்கவில்லையோ?**

— சிவாஜி



# கீழ்ப்படிவுள்ள மனைவி வேண்டுமா?

## உருளைக் கிழங்கு சாப்பிடச் சொல்லுங்கள்

கடந்த 50 வருடங்களாக உணவு வகைகளைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஜப்பானிய உணவு நிபுணர் திரு. கிச்சிகுரியாமா சில ருசிகரமான தகவல்களை வெளியிட்டிருக்கிறார்.

ஒருவர் எத்தகைய உணவை விரும்புகிறார் என்று தெரிவித்தால் அவருடைய உருவ அமைப்பு எப்படிப்பட்டது என்று தான் கூறுவதாகச் சவால் விடுகிறார் இந்தநிபுணர்.

உருளைக்கிழங்கைப் புசிக்கவிரும்புவர்கள் வாழ்க்கையில் அதிஷ்டசாலிகளாக இருப்பார்களாம். உருளைக்கிழங்கைப் புசிக்கும் ஆண்கள் அதிககாலம் சீவிப்பதோடு அன்புள்ளவர்களாகவும் எல்லோருடனும் சேர்ந்து பழகு பவர்களாகவுமிருப்பர். குடும்ப வாழ்வில் மனைவிமாரோடு தகராறு இல்லாமல் தந்திரமாகவும் வாழ்வார்களாம்.

உருளைக்கிழங்கை விரும்பி உண்ணும் பெண்கள் ஆனந்தமாக வாழ்க்கை நடத்துபவர்களாகவும் நல்ல மனைவிகளாகவுமிருப்பார்களாம்.

வாழைப் பழத்தை விரும்பிப் புசிக்கும் ஆண்கள் சகிப்புத்தன்மையுள்ளவர்களாகவும், உணர்ச்சியுள்ளவர்களாகவும், சக்தியுள்ளவர்களாகவும், காரிய சித்தியுள்ளவர்களாகவுமிருப்பர். வாழைப் பழத்தில் விருப்பமுள்ள பெண்கள் அளவுக்கு மிஞ்சிய உணர்ச்சியுள்ள மனைவிகளாக இருப்பராம்:

இலையோடு கூடிய மரக்கறி வகைகளை விரும்பும் ஆண்கள் நீண்ட காலம் சீவிப்பவர்களாகவும், கவர்ச்சியுள்ளவர் களாகவுமிருப்பர். பெண்கள் கீழ்ப்படிவுள்ள மனைவிகளாகவிருப்பார்களாம்.

## பெண்டாட்டியை அடக்கிப்பார்

புதிதாகக் காதல் மணம் செய்து கொண்ட ஒரு இளைஞனுக்கு, மிகச் சில நாட்களிலேயே வாழ்வு கசந்துவிட்டது. அவனும் மனைவியும் ஒன்ருகப்படித்துக் காதலித்தவர்கள். காதல் வாழ்கை இனித்தது. கடிமணம் நடந்தது. அதன் பின்னர்தான் தொந்தரவு ஏற்பட்டது. மனைவி படித்துப் பட்டம் பெற்றவளல்லவா? ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழவேண்டுமென்ற கொள்கையுடையவள். அவள் சமஉரிமை கோரினுள். வந்தது ஆபத்து!

'கோப்பி கொண்டுவா' என்று கணவன் கேட்டால், 'சரி, இன்று நான் கொண்டுவருகிறேன், நாளை நீங்கள் கொண்டு வாருங்கள்' என்று மனைவி பதில் சொன்னுள், சமையல் வேலை முதற்கொண்டு எல்லா வேலை களிலும் அவள் சமத்துவம் கோர ஆரம்பித்ததுந்தான் இளைஞனுக்கு வாழ்க்கையில் கசப்பு ஏற்பட்டது,

தனக்கு வழிகாட்டியாக இருந்த ஒரு பெரியாருக்கு இவ்விபரத்தை அவன் எழுதி 'ஐயா, சீக்கிரம் இது தீர ஒரு வழிகூறுங்கள், இல்லாவிட்டால்.........' என்று பயமுறுத்தியிருந்தான்.

கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்தான் அந்த இளைஞனுக்கு வழிகாட்டியாக இருந்தபெரியார். அவருக்குத்தான் இளைஞன் கடிதம் எழுதியிருந்தான். சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த விசுவநாதம் அவர்கள் இந்த ருசிகரமான செய்தியைக் கூறினுர்.

இளைஞனின் கடிதம் விசுவநாதம் அவர்களைமிகுந்த சிந்தனையில் ஆழ்த்தி விட்டது. தீரயோசித்த பின் ஏழே ஏழு எழுத்துக்களில் அவர்ஒருபதிலை எழுதினுர்,

'அடக்கிப் பார்'

என்பதுதான் அவருடைய பதில். அடுத்த வாரம் இளைஞனின் கடிதம் மீண்டும் வந்தது, 'ஐயா உங்கள் புத்திமதியின்படி அவளை அடக்கிப் பார்த்தேன். அது இன்னும் ஆபத்தாக இருக்கிறது. எங்கள் வீடு பெரிய போர்க்களமாக மாறிவிட்டது. உடனடியாக வேறு நல்லயோசனை கூறுங்கள்' என்று அவன் எழுதியிருந்தான்.

முத்தமிழ்க்காவலர் பின்னரும் தீர ஆலோசித்தபிறகு, முன்னரிலும் ஒரு எழுத்துக்குறைவாக ஆறே ஆறு எழுத்களில்

'அடங்கிப் போ'

என்று எழுதிஅனுப்பினுர், இந்த யோசனை வெற்றி அளித்து விட்டது,

கணவன் அடங்கிப்போவதைக் காணக்காணமனைவியும் அடங்கிஅடங்கிவந்தாளாம். மிகச் சில நாட்களுக்குள் பழைய காதல் நிலை ஏற்பட்டு அவர்களுக்குள் ஒற்றுமை நிலவிற்ரும்!

## பஸ்ஸிலே பயணம் செய்யும் 'நாரீமணிகள் உடல் நசுங்கி உருக்குலையும் பரிதாபம்.

''இலங்கையில் தமிழ்ப் பகுதிகளில் மட்டுமே பஸ்களில் பெண்களுக்கென்று தனியாக இடம் ஒதுக்கிக் கொடுக்கிறுர்கள். அது நல்ல முறையல்லவா?'' என்று ஒருவர் மற்றொருவரைப் பார்த்துக் கேட்டார். இரண்டாமவர் 'ஆம்' என்றுதலையசைத்துவிட்டுப் போயிருக்கலாம். ஆனுல் அவர் அப்படிச் செய்யவில்லை.

''நல்ல முறையா? அது நாசமாய்ப் போன முறையல்லவா?" என்று மனிதர் சீறிவிழுந்தார். அவர் முகத்தைப் பார்த்தால் 26-6-61 திங்கட்கிழமை மாலை பஸ்ஸுக்காகத் தவங்கிடந்தவர்களில் ஒருவர்போலத்தோன்றியது. அல்லது அவருக்கு மூக்கில் கோபம் வருவானேன் ...

அவர் கத்திவிட்டுப் போனதை இங்கு சிந்துகிறேன், பார்த்துப் பொறுக்குங்கள்,

ஒரு பெண்ணுக்கு பஸ்ஸில் தனியாக மட்டும் இடம் ஒதுக்கிக்கொடுத்துவிட்டால்போதுமா? கம்பியில் வெளவால் போல் தொங்கிக் கொண்டிருக்கும் பிரயாணிகளின் நெரிசலில் அந்தப் பெண் இடையே பஸ்ஸை நிறுத்தி இறங்கும்போது தன் உடலில் பாதியைத்தானே காப்பாற்றிக்கொண்டு கீழே போய் விழுகிறுள். அவள் நெரிசலில் கசக்கிப் பிழியப்படுவதைப்பற்றியாராவது கவலைப்படுகிறுர்களா?

### கண்டக்டர் தர்பார்

கண்டக்டர்கள் பொதுமக்களுக்குச் சேவை செய்ய நியமிக்கப்பட்டவர்கள். இதை அவர்கள் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. பொதுமக்கள் பணம் கொடுத்துப் பிரயாணம் செய்கிறுர்களேயல்லாமல் கண்டக்டர்கள் தயவிலல்ல என்பதை இவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கண்டக்டர்கள் தேவபிறவிகள். இவர்கள் வாயில் மரியாதையான பேச்சே வராது. வா. ஏறு, பின்னுக்குப்போ என்றசொற்களை இவர்கள் சரளமாக உபயோகிக்கிறுர்கள்.

### பரிதாபம்

சுமார் பத்துவயது மதிக்கத்தக்க பையனொருவன் கையில் ஒரு பாரமான சாக்கோடு பஸ்ஸில் ஏறினுன். அவன் இறங்க வேண்டிய இடம் முத்திரைச்சந்தையடி. இந்த இடத்தை பஸ் சமீபித்ததும் பையன் எழுந்து 'இறங்கப் போகிறேன்' என்று கத்தினுன். 'ஏன் சத்தம் போடுகிறுய்? பெல்லை யடியன்......' இது கண்டக்டர். 'பெல்' முகட்டிலிருக்கிறது. பையனுக்குக் கை எட்டவில்லை. அவஸ்தைப்படுகிறுன், கண்டக்டர் சிரிக்கிறுர். இதற்குள் பஸ் கள்ளியங்காட்டில் போய் நின்றது. பையன் சாக்கு நிறையச் சாமானேடு இறங்கினுன். இனி அவன் சாக்கைச் சுமந்து கொண்டு முத்திரைச்சந்தையடிக்குப்போகவேண்டும். கண்டக்டரின் இந்தப் பொறுப்பற்ற தன்மையைக் கண்டிக்க யாருமில்லை,

### ஊரடங்குச்சட்டம்

பத்து மணிக்குள் ஒவ்வொருவரும் வீடுபோய்ச் சேருவதற்கு வசதியாகக் கடைசிபஸ்கள் ஒழுங்கு செய்யப் பட்டிருக்கின்றன. 26-6-61 மாலை யாழ் பஸ் நிலையத்துக்குச் சுமார் ஆறரை மணியளவில் சென்றவர்கள் 9 மணி வரையும் பஸ்ஸுக்காகத் தவங்கிடந்தார்கள். கடைசிவரையில்பஸ் கிடைத்து வீடு திரும்புவோமோஎன்பது சந்தேகமாகவேயிருந்தது. இதற்குள் மழையும் வேறு பிடித்துக் கொண்டது. பஸ் வராததற்குக் காரணம் வழியில் உடைந்து விட்டதாம். போசனுக்காக பஸ்கள் அனுராதபுரம் போய்விட்டன வென்று கால்சட்டைக்காரர் சிலர் பேசிக்கொண்டதும் காதில் வீழ்ந்தது. எது எப்படியிருந்தாலும் ஒன்பது மணிக்குப் புறப்பட்டு பத்து மணிக்குள் பருத்தித்துறை போகவேண்டுமேஎன்று பதைத்தார்கள் பிரயாணிகள். ஊரடங்குச் சட்டமல்லவா? பஸ் நிலையத்துக்குப்போய் விட்டால் போதுமா? நிலையத்தில் இறங்கி மைல் கணக்காக நடந்துதங்கள் கிராமங்களுக்குப்போகிறவர்களும் இருக்கிறுர்களல்லவா? இத்தியாதி விஷயங்களைப்பற்றிஇ.போ.ச. கவலைப்படுமா?

## பொய்க்கால் மனிதன் 3200 மைல் நடந்தான்.

உங்களால் எவ்வளவு தூரத்தை நடந்து கடக்க முடியும்? களக்கூத்தாடிகள் அணியும் பொய்க்காலுடன் ஒருவர் 3200மைல் தூரத்தை நடந்து கடந்தாராம். இவருடைய பெயர் பீடேமாக்டொனுல்ட். அரிஸிஞுவிலுள்ள பேரானிக்ஸைச் சேர்ந்த இவரது கைகளும், கால்களும் இரும்பைப் போல் வைரம் பாய்ந்திருக்கின்றனவாம்.

சமீபத்தில் இவர் நியூயோர்க் நகரத்திலிருந்து லொஸ் ஏஞ்சலுக்கு பொய்க்காலில் நடந்து சென்ருர்.

பொய்க்கால்கள் செய்யும் தொழிற்சாலை அதிபரொருவர் மேற்படி பொய்க்கால் பிரயாணத்தை மேற்கொள்ளும்படி மாக்டொனுல்டுக்கு 50 பவுண் கொடுத்தாராம். செய்தி வெளியானதும் பல்லாயிரக்கணக்கானமக்கள் வீதி ஓரத்தில் நின்று பீடே பொய்க்காலில் நடந்து செல்வதைக் கண்டு ஆரவாரம் செய்தனர்.

1958-ம் வருடத்தில் பிரான்ஸைச் சேர்ந்த சில்வைன் டோர்னன் என்பவர் பொய்க்காலில் பிரான்ஸிலிருந்து மொஸ்கோவுக்கு நடந்து சென்று ஒரு உலக ரெக்கோட்டை ஸ்தாபித்தர். ஆனுல் இவர் நடந்துசென்ற தூரம் 1580 மைல். இத்தூரத்தை நடந்து செல்ல இவருக்கு 58 நாட்கள் பிடித்தன.

## பதவிக்காகக் காத்திருக்கும்
# தமிழாசிரியருக்கு
## விமோசனம் இல்லை!

பயிற்சிபெற்று வெளியேறிப் பதவிக்காகக் காத்திருக்கும் யாழ்ப்பாணத்துத் தமிழ் ஆசிரியர்களுக்கு இப்போதைக்கு விமோசனம் பிறக்கவழியில்லை. எனவே அவர்கள் பேட்டிகளையும், தூதுகளையும் தற்காலிகமாகக் கைவிட்டுப் பொறுமையோடு இருப்பது நல்லதென்று வட பகுதிக் கல்விக் கந்தோர்ப் பக்கமாகச் சொல்லிக்கொள்ளப்படுகிறது.

சராசரிக்கு மேலால் பதவியில்குந்திக்கொண்டு சம்பளம்பெறுபவர்கள் என்ற ஆசிரியர்கள் பட்டியல் ஒன்றை அங்கு வைத்துக் கொண்டு அந்த இருநூறு பேரையும் எங்கே பிடித்துத்தள்ளுவது என்று திண்டாடுகிறார்கள். இந்த லட்சணத்தில் புதிய நியமனம் என்ற பேச்சுக்கே இடமில்லையாம்.

“இரண்டாவது தவணைக்குள் எப்படியும் இடம் எடுத்துத் தருவேன். என்னோடுஒருதடவை கொழும்புக்கு வாருங்கள்” என்று ஆசைவார்த்தை பேசுபவர்களைக்கண்டு மோசம்போக இனியும் ஆசிரியர்கள் தயாரா?


## செனட் சபைக்குப் போட்டியிடும்
## சிறுபான்மைத் தமிழர்

செனேட் சபையில் சில இடங்கள் அண்மையில் காலியாகின்றனவல்லவா? அவற்றில் ஒன்றைக் கைப்பற்ற அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் முயற்சிக்கிறாராம். இவர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்.

சென்றமுறை தமிழரசுக் கட்சி நிறுத்திய திரு நல்லையாவுக்கும் இவருக்கிடையே ஏற்பட்ட மோதலில் இவர் தோல்வியடைந்தவர்.

இந்தமுறை தமிழரசுக் கட்சி இளைப்பாறிய கூட்டுறவுத் துறை உதவி ஆணையாளர் திரு. மாணிக்கத்தை நியமிக்கவிருந்தனர். ஆனால் .....தற்போதைய சூழ்நிலைதான் வாசகர்களுக்குத் தெரியுமே.

இம்முறை திரு. சுப்பிரமணியத்துக்கு யோகமடிக்கலாமென்று பேச்சடிபடுகிறது.




பையன்: கார்ட்டூனை உடனே வாங்கி வரும்படி ஆசிரியர் அனுப்பியிருக்கிறார் சேர்

சித்திரகாரர்: இதோ வரையப்போகிறேன் ஒருமணி நேரம் கழித்துவா.

பையன்: த றியளா சேர்?

சித்: என்னத்தைக் கீற? ஒரு ‘ஐடியா’ வும் வருகுதில்லை. எதற்கும் இன்னும் ஒரு மணி நேரத்தால் வா; தந்து விடுகிறேன்.



பையன்: இறம்பலேட்டாய்ப்போச்சு சேர்

சித்: இது பெரிய சங்கடமாயிருக்கே; ‘ஐடியா’ வருகுதில்லையே!... கொஞ்ச நேரம் பொறுத்துவா!

சித்: இதோ, கார்ட்டூன்!

பைய: வெறும்பேப்பராய்இருக்கே சேர்?

சித்: இன்றைய அரசியல் நிலையில் இது தானப்பா உண்மையான ‘கார்ட்டூன்!’

# மனிதர்கள் வாழும் விநோத வீடுகள்!
## ‘வைன்’ பீப்பாவுள் வீடமைத்துள்ள அமெரிக்கக் கலைஞன்

காடுகளிலே மிருகங்களைப்போல் வாழ்ந்தமனிதன் காலகதியில் குடிசை, வீடு, மாளிகை என்று உயர்ந்துவிட்டான் என்று நினைக்காதீர்கள், மனித குணமே மாற்றத்தை விரும்புவதுதான்.

சமீபத்தில் நாலு குடும்பங்கள் ஒன்று சேர்ந்துஓர் பழைய நீர்த்தேக்க கட்டிடத்தை விலைக்கு வாங்கினார்கள். நகரம் முழுவதற்கும் தண்ணீர் சப்ளை செய்ய நீரைத் தேக்கி வைப்பதற்கு ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் பெரியமலை போலக் கட்டிடத்தை எழுப்பி அதன் உச்சியில் ராட்சத ‘ராங்க்’ வைப்பார்கள். கட்டிடம் எழுப்பாமலே மிக உயரமான இடத்தில் ‘ராங்க்’ நிறுவுவதும் உண்டு. இத்தகைய ஒரு கட்டிடத்தைத்தான் இவர்கள் வாங்கி அங்கு சென்று கூட்டாக வசிக்கிறார்கள். இந்த ‘ராங்க்’ பத்தாயிரம்கலன் தண்ணீர் கொள்ளக் கூடியது.

இன்னொரு செல்வந்தர் பெரிய படகொன்றை வாங்கி அதையே தனது வீடாக மாற்றிக்கொண்டு ஆற்றின்மேல் வாழுகிறார்.

வில்லியம் பீக் என்ற ஒருவர் ஐயாயிரம் பியர் போத்தல்களினால் வீடு கட்டி அதனுள் வாசம் செய்கிறார்.

டொனஹே என்ற அமெரிக்கக் கலைஞர் ஒருவர் வைன் தகரப் பீப்பாவை வீடாகமாற்றி அதனுள் வசிக்கிறார். இந்தப் பீப்பா 21 ஆயிரம் கலன் வைன் கொள்ளக் கூடியது. இதற்குள் அவர் அறைகள் கூட அமைத்திருக்கிறார்.

* * *

மனைவி; மிருகங்களில் துடுக்குத்தனமுள்ளது மானல்லவா?
கணவன்: ஆம் மானே!

## ‘எனது நண்பன் கோல்கா’
### குழந்தைகளின் சிறந்த சினிமாப்படம்

அண்மையில் வெளியான சோவியத் குழந்தைகள் படங்கள் யாவற்றைக் காட்டிலும் மிகவும் சுவையான படம் என்று கருதப்படும் “எனது நண்பன் கோல்கா” சென்றமாதம் திரைப்பட நிபுணர்களுக்கென மாஸ்கோ நகரில் பிரத்தியேகமாகத் திரையிடப் பட்டது.

சோவியத் கல்வி அமைப்பில் ஏற்பட்டு வரும் சீர்திருத்தங்களே இப்படத்தின் கருவாக அமைந்துள்ளன. வாழ்க்கைக்கும் பள்ளிப் படிப்புக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு வேண்டும் என்பதை இப்படம் அழகாக வலியுறுத்துகிறது. வேறுவழியின்றி ஆசிரியர் தொழிலை மேற்கொள்ளும் நபர்களை இது சாடுகிறது.

மாஸ்கோ பள்ளிகளின் மாணவர்களே இப்படத்தில் முக்கியபாத்திரங்களை வகிக்கின்றனர். தற்பொழுது மாஸ்கோ குழந்தைகள் ஸ்ரூடியோவின் மாணவராகவுள்ள அலக்சாண்டர் கோபாசேவ் என்னும் 15 வயதுச் சிறுவன்தான் இதன் கதாநாயகனாக நடிக்கிறான்.

# திரை மறைவில்

## நிதியமைச்சரின் பயமுறுத்தல்:

குளுக்கோஸ் சத்தியாக்கிரகி ராஜரத்தினக்கோனரின் உண்ணாவிரதம் அரசாங்கக் கட்சியிலேயே பெரிய கருத்துவேறுபாடுகளை உண்டுபண்ணியிருப்பதாகச் சென்றவாரம் எழுதினேனல்லவா? அக்கருத்து வேறுபாடுகள்மந்திரிசபைவரையும் சென்றுவிட்டதாக இப்பொழுது கிடைத்த தகவல்களிலிருந்து தெரிய வருகிறது. பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட ராஜரத்தினக் கோனரை விடுதலைசெய்ய வேண்டுமென்று மந்திரிசபையிலுள்ள சிலர் கோரினர்களாம். ராஜரத்தினக் கோனரை விடுதலை செய்தால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள மற்றத் தலைவர்களையும் தான் விடுதலைசெய்துவிடப் போவதாக 'எல்லாம் வல்ல' நிதியமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர்: டயஸ் பண்டாரநாயக்கா பயமுறுத்தினராம்.

## இரண்டாவது தோல்வி:

ராஜரத்தினக் கோனரின் உண்ணா விரதத்தைப் பயன்படுத்தி அரசாங்கக் கட்சியில் பெரும் பிளவொன்றை ஏற்படுத்துவதற்குக் 'கட்சிவிட்டுக் கட்சி பாய்ந்து கடைசியில் எல்லாக் கட்சிகளாலும் விரட்டியடிக்கப்பட்ட' ஆர். ஜி. சேனநாயக்கா பெருமுயற்சியெடுத்தார். இரவிரவாக அவர் ஒவ்வொரு அரசாங்கக் கட்சிப் பிரதிநிதியின் வீட்டிற்கும் சென்றராம், கடைசியில் தனது சொந்த மைத்துனரான ஸ்டீபன் சமரக்கொடியைத்தான் அவரால் திருப்ப முடிந்தது. அரசாங்கக் கட்சியில் பிளவு ஏற்படுத்த ஆர். ஜி. சேனநாயக்கா எடுத்த முயற்சிகளில் இது இரண்டாவதாகும். பாவம் இந்த முயற்சியிலும் அவருக்குத் தோல்வியே கிடைத்தது.

## உண்ணாவிரத நாடகம்:

குளுக்கோஸ் சத்தியாக்கிரகி ராஜரத்தினக்கோனர்(அவர் இம்முறையும் குளுக்கோஸ் குடித்ததாக அவரின் மகன் பொலிஸ் அதிகாரியொருவரிடம் கூறியதாக 'பொழுது ஏற ஏற நிதானத்தை இழந்து கொண்டே போகும்' தலதாபன அமைச்சர் மகாநாம சமரவீர பாராளுமன்றத்தில் கூறினர்) பொலீசாரால் கைது செய்யப்பட்ட சம்பவமும் ஒரு நகைச்சுவை நாடகம் போன்றே நடந்தேறியது. ராஜரத்தினக்கோனரையும் அவரின் அன்பு மனைவியையும் கைதுசெய்ய 'வாரண்ட்'டுடன் இராணுவ 'அம்புலன்ஸ்" ஒன்றில் சனப் பிரதிநிதிகள் சபைக் கட்டிடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்களாம் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலும் வேறுசில உயர்தர அதிகாரிகளும், அந்த 'வாரண்'டைக் கொண்டுபோய் ராஜரத்தினக்கோனரின் அன்பு மனைவியிடம் கொடுத்தார்களாம். அந்த 'வாரண்'டைப் பார்த்ததும் அது செல்லுபடியாகாது என்று அவர் அறிவித்துவிட்டாராம். அவர்கள் இருவரும் பாராளுமன்ற வளவிற்குள் இருந்ததால் சாதாரண 'வாரண்'டில் அவர்களைக் கைதுசெய்ய முடியாது. சபாநாயகரின் அனுமதிபெற்ற 'வாரண்'டில்தான் அவர்களைக்கைது செய்ய முடியும். திருமதி ராஜரத்தினக் கோனர் இதைச் சுட்டிக் காட்டியதுடன் "வெலிமடையில் தான் நாங்கள் கே. எம். பி. ராஜரத்தினவும் குசுமா ராஜரத்தினவும். பாராளுமன்றக் கட்டடத்தில் இருக்கும் நாங்கள் மக்கள் பிரதிநிதிகள். சபாநாயகரின் அனுமதியின்றி எங்களை எவரும் தொட்டமுடியாது" என்றும் சொன்னராம்.

அதன் பின்பு டெலிபோன் மணிகள் ஒலித்தன. ராஜரத்தினக் கோனரைக் கைது செய்ய உத்தரவிட்ட 'எல்லாம் தெரிந்தவர்கள்' தங்கள் தவறை உணர்ந்தார்கள். கம்பளையிலுள்ள சபாநாயகரின் வீட்டிலுள்ள டெலிபோன் மணி அவசரமாக ஒலித்தது. கொழும்பிலிருந்து ஒரு பொலீஸ்கார் கம்பளைக்குச் சென்று 'வாரண்'டில் சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொலையின் கையொப்பத்தைப்பெற்றுக்கொண்டு திரும்பியது. கடைசியில் ராஜரத்தினக்கோனர் கைதுசெய்யப்பட்டபோது 'பேய்கள் நடமாடும்' (இவை காலித் தகநாயக்காவின் வார்த்தைகள்) அதிகாலை இரண்டுமணி நேரம்!

## வீட்டிற்கு விரைந்தவர்கள்:

பொலிசார் கைதுசெய்து ராஜரத்தினக்கோனரை அவரின் வீட்டிற்கு இராணுவ 'அம்புலன்சில்' எடுத்துச் சென்றனர். அவர்கள் அங்குபோய்ப் பத்து நிமிட நேரத்தில் எந்தக்கட்சியிலும் நிலைத்திராத ஆர். ஜி. சேனநாயக்காவும் மறுபடியும் மக்கள் நண்பனாக மாறிக்கொண்டு காலித்தகநாயக்காவும் ராஜரத்தினக்கோனரின் வீட்டிற்குப்போய் சேர்ந்தார்களாம். முதலில் அங்கு போய்ச் சேர்ந்தவர் ஆர். ஜி. தானும்.

## சனிக்கிழமைகளில் பார்க்கலாம்:

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை அவர்களின் நண்பர்களும் இனத்தவர்களும் சனிக்கிழமைகளில் போய்ப் பார்ப்பதற்கு இப்பொழுது வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த வசதியைப் பயன்படுத்தி பொதுமக்களின் நல்லெண்ணத்தையும் நல்லாதரவையும் பெற்றுள்ள உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. எம். சிவசிதம்பரம் தடுப்புக்காவலிலுள்ளவர்களை இருவாரங்கட்கு முன்பு சந்தித்ததாக அறிகின்றேன்.

## குசு குசு மகாநாடு

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தமிழர் 'பந்தம்' ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமியின் வீட்டில் ஒரு 'குசு குசு' மகாநாடு நடத்தப் பட்டதாக அறிகின்றேன். அம்மகாநாட்டிற்குத் தமிழ் மக்களிடையே என்றுமே செல்வாக்குப் பெற்றிராத தப்பற்ற தலைவர் செனட்டர் நடேசன் போன்றோர் அழைக்கப்பட்டிருந்தார்களாம்! இதுமாதிரியான குசுகுசுக் கூட்டங்களால் தேசியப் பிரச்சனைகளைத் தீர்க்கமுடியாதென்பதை அந்தப் பந்தப் பெருமானர்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்:

## தமிழ்ப்பற்று உடையவரா?

முஸ்லீம்களின் தாய் மொழி தமிழ் மொழிதான் என மூதூர்ப் பிரதிநிதி மஜீத் பல ஆதாரங்களுடன் பேசினர்-பத்திரிகைச் செய்தி.

வாலாம்பிகை: மூதூர்ப் பிரதிநிதி உண்மையில் தமிழ்ப் பற்றுள்ளவர்தான் தம்பி!

சிவபாதசுந்தரம்: அதெல்லாம் வெளிவேஷம் அக்கா!

வாலா: ஏன் அப்படிச் சொல்கிருய்?

சிவ: உண்மைத் தமிழ்ப் பற்றுடையவரென்ருல் சுதந்திரக் கட்சியில் எப்படி இருக்க முடிகிறது அவரால்?

வாலா: உள்ளுக்கிருந்து போராடுவதும் போராட்ட முறைகளில் ஒன்று தானே!

சிவ: உள்ளுக்கிருந்து போராடுவதற்கும் ஒரு தகுதி வேண்டும் அக்கா! மேசையிலிருந்து உதிரும் பாண் பொருக்குகளுக்காக அலைபவர்கள் எப்படி உள்ளுக்கிருந்து போராட முடியும்?

## சினிமா நோட்டீஸ்

வந்து விட்டது! வந்து விட்டது!
நீங்கள் யாவரும் ஆவலுடன்
எதிர்பார்த்திருந்த
அதிஉன்னத திரைஓவியம்!
**"சர்வாதிகாரப் பாதையில்"**
உங்கள் அபிமான நட்சத்திரங்கள்
பீலிக்சாமி, சிறிதா அம்மா ஆகியோருடன்
நகைச்சுவை மன்னர்கள்
ஈயார். எஸ்ஆர். குமாரசாமித்துரை,
'தலைப்பாகை' நடேச ராசா ஆகியோர்
நடிக்கும் இன்சுவைக் காவியம்.
'துரோகி' தியேட்டரில் தினம் மூன்று
காட்சிகள் காட்டப்படும்.

## விட்டுத் தொலைத்தாளே!

பிரான்ஸ் டெலிவிஷன் ஒலிபரப்பாளராகஜாகோலின் ஜோபேட் என்ற பெண் கடமையாற்றுகிருள். இவளுக்கு வயது 35. ஆனாலும் கட்டுக்குலையாத உடலமைப்புக் கொண்டவள். கவர்ச்சிமிக்கதோற்றமுள்ளவள், டெலிவிஷனில் ஒலிபரப்பும் போது கண்களை வெட்டி உடலை நெளித்து ஒய்யாரமாகப் பேசுவாள். டெலிவிஷன் முன்னல் உட்கார்ந்திருப்பவர்கள்பெட்டியைஅணைத்து அவளது உருவத்தை முத்தமிடுவார்களாம்.

இவளுக்கு ஒரு வருடத்தில் இவளது 'விசிறி'களிடமிருந்து எழுபதாயிரம் கடிதங்கள் வருகின்றன; ஒவ்வொரு நாளும் இவளது உருவம் டெலிவிஷனில் தெரிந்ததும் தங்கள் கணவர்கள். குடல் தெறிக்க ஓடிவந்துபெட்டியைக் கட்டியணைத்து இவளை முத்தமிடுகிருர்களென்று ஏழு 'விசிறி'களின் மனைவிகள் இவளுக்குக் கடிதம் எழுதியிருக்கிருர்கள்.

"நீ டெலிவிஷனில் தோன்றி என் கணவனைப் பார்த்துக் கண்ணடிக்கிருய். இதைஉடனடியாகநீ நிறுத்தவில்லையானல் ..." இப்படிப் பாவம் ஒரு மனைவி கடிதத்தில் சீறுகிருள்.

ஜாக்கி இக்கடிதத்துக்குப் பதில் எழுதும்போது, டெலிவிஷனில் தோன்றுவதுதன்வயிற்றுப் பிழைப்புக்காகவென்றும்டெலிவிஷனை விற்றுத் தொலைத்துவிட்டால் குடும்பத்தகராறு ஏற்படாதென்றும் ஆலோசனை கூறினள்.

அந்தப்பெண் மறுபடியும் கடிதமெழுதினள்: "உனது ஆலேசனைக்கு நன்றி. டெலிவிஷனை விற்றுத் தொலைக்க வேண்டிய அவசியமொன்றும் இப்பொழுது எனக்கு ஏற்படவில்லை. நான் என்கணவனையேவிட்டுத் தொலைத்துவிட்டேன்!"

இராணுவத்தினரின் வசிப்பிடத்தை ஒரு லெப்டினன்ட் பரிசோதித்தபோது ஒருவரின் அழுக்குஉடுப்புக்கள் போடும் பையில் புத்தகங்கள் வைத்திருப்பதைக் கண்டார். இராணுவத்தினர் அந்தந்த பொருளை அந்தந்த இடத்தில் வைத்திருக்க வேண்டும்.

லெப்:- 'டோபி'ப் பையில் புத்தகங்களை ஏன் வைத்திருக்கிருய்?

வாலிபன்:- (தயங்காமல்) அவை அழுக்கடைந்த புத்தகங்கள் சேர்.

புதினம் 2-7-

சிறுவ...
பழிக்கு...
காதை...

கோ...
நீதிபதியி...

சினிமா உலகிலே

எமது சென்னை நிருபர் பி. வி. கிரி

# 'நில் அங்கே!' என்றதும் நின்றார் ராசேந்திரன்!

'நில் அங்கே!' என்றதும் எஸ். எஸ். ராஜேந்திரன் அப்படியே நின்று விட்டார்! கட்டளையிட்டதுயார் தெரியுமா? விஜயகுமாரி!

இராசேந்திரன் ஒரு பெண்ணைக் காதலித்தார். அந்தப் பெண்ணை அவர் அண்ணனும் காதலித்தார்! உடனே எஸ். எஸ். ஆர். தனது காதலியைத் தன் அண்ணனுக்காகத் தியாகம் செய்தார். பின் ஒருகுருட்டுப் பெண்ணை மணந்துகொண்டார். குருட்டுப் பெண்ணுடன் எஸ். எஸ். ஆரால் குதூகலமாகக் குடும்பம் நடத்தமுடியவில்லை. வாழ்நாள் முழுவதும் கண்ணீரும் கம்பலையுந்தான். குருட்டுப்பெண்ணின் கணவனால் காதலிக்கப்பட்ட கோமளவல்லி, எஸ். எஸ். ஆரைத்திருத்த முயற்சிக்கிறாள். ஆனால் அவன்மனம் எங்கேயோ ஓடுகிறது!

அப்போது "நில்அங்கே!" என்றகுரல் கேட்டது. எஸ். எஸ். ஆர். திரும்பிப் பார்த்தார். அந்தக் குரல் இனியகுரலாக இசையாக மாறியது. ஆம். பாடலாக எழுந்தது. பாடியதுவிஜயகுமாரி.

இந்தக்காட்சி மார்டன் தியேட்டர்சாரின் ஒருபடத்திற்காகச் சுடப்பட்டது. இப் படத்தில் எம். ஆர். ராதா, எஸ். வி. ரங்கராவ் சௌகார்ஜானகி, முத்தையா, பி. எஸ். பாண்டியன் முதலியோரும் நடிக்கின்றனர்.



'வில்லி'யாகமட்டுமல்ல; எந்தப் பாத்திரத்தைக்கொடுத்தாலும் அழகு தமிழிலே அருமையாகப் பேசித் திறம்பட நடிக்கும் திரைப்பட அழகி - சுத்தத்தமிழச்சி எம். என். ராஜம் 'புதின'த்துக்கென்று இப்படிக் காட்சிதருகிறார்.

## சுருள் செய்தி

### ஆயிரத்தில் ஒருவன்

'குமுதம்' உதவியாசிரியர் ரா. கி. ரங்கராஜன் எழுதிய 'ஒரே ஒரு வழி' என்ற கதையைத் தழுவி 'ஆயிரத்தில் ஒருவன்' என்ற தலைப்பில் ஒருபடத்தை பாலுபிலிம்சார் தயாரித்து வருகின்றனர்.

இப்படத்துக்கு ஏ.எல். நாராயணன் கதைவசனம் எழுதுகிறார். இப்படத்தில் எம். ஆர். ராதா, டி. ஆர். ராமச்சந்திரன், கல்யாண்குமார், உதயகுமார், சௌகார் ஜானகி, ஜெமினிசந்திரா, மனோரமா ஆகியோர் நடித்துவருகின்றனர்.

### முத்துமண்டபம்

எஸ். எஸ். ஆர். பிக்சர்சாரின் அடுத்த தயாரிப்பான 'முத்துமண்டபம்' விரைவில் உருவாகவிருக்கிறது.

எஸ்.எஸ்.ஆர். டைரக்ட் செய்துநடிக்கும் இப்படத்தில் விஜயகுமாரி கதாநாயகியாக நடிப்பார்.

### ஆசை அண்ணாவும் அருமை அண்ணியும்!

சென்னை இரட்டையர் கலை மன்றத்தாரின் "ஆசை அண்ணாவும் அருமை அண்ணியும்" என்ற சமூக நாடகம் கே. ஆர். இராமசாமி தலைமையில் நடைபெற்றது. நடிக நடிகையர் நன்கு நடித்தனர். கதை வசனம் தி. பா. தம்பித்துரை. பாடல்கள் பி. வி. கிரி.

### செங்கமலத்தீவு

எம். ஏ. வியின் 'செங்கமலத்தீவு' என்ற கதை தயாராக இருக்கிறது. ஏற்காடு, ஒகனக்கல், சேலம் ஆகிய இடங்களில் தயாரிக்கப் போகும் இப்படத்தில் ஆனந்தன் கதாநாயகனாகவும், ராஜ்ஸ்ரீ கதாநாயகியாகவும் நடிப்பார்கள். ராஜேந்திரன் டைரக்ட் செய்வார்.

### குமரி பிலிம்ஸ்

'பாதை தெரியுதுபார்' என்ற படத்தைத் தயாரித்த குமரிபிலிம்சார் அடுத்த தயாரிப்புக்கான கதையை பரிசீலித்து வருகிறார்கள். இந்தப்படத்தில் பல புதுமுகங்கள் நடிப்பார்கள். நிமாய்கோஷ் இப்படத்தை டைரக்ட் செய்வார்

### செந்தாமரை

மதராஸ் பிக்சர் சாரின் செந்தாமரை' ஜூலைமாதம் திரையிடப்படும். கடந்த எட்டு ஆண்டுகளாகத் தயாரிக்கப்பட்ட படம் இது. இந்தப்படத்தில் சிவாஜிகணேசன், கே.ஆர். ராமசாமி, எஸ்.எஸ்.ராஜேந்திரன், சந்திரபாபு, பி.ஆர். பந்துலு, தங்கவேலு, வி. கே. ராமசாமி, ராமராவ், லலிதா, பத்மினி ஆகியோர் நடிக்கிறார்கள்.

### பூமுடித்தவள்

வட பழனி பிக்சர்சாரின் 'பூமுடித்தவள்' என்றகதைக்கு ஏ.கே. வேலன்திரைக்கதைவசனம் எழுதுகிறார். இப்படத்தில் எம். ஆர். ராதா, ராஜேந்திரன், ராஜகோபால், விஜய குமாரி, லட்சுமிராஜம் ஆகியோர் நடிக்கின்றனர்.

### சௌந்தர்யா பிலிம்ஸ்

சௌந்தர்யா பிலிம்சாரின் ஒருபடம் தயாராகவிருக்கிறது. இக்கதைக்கு இரா. செழியன் கதைவசனம் எழுதுகிறார்.

இப்படத்தில் எம். ஜி. இராமச்சந்திரன், குலதெய்வம், ராஜகோபால், சௌகார் ஜானகி, ராஜசுலோசனா, ஆகியோர் நடிப்பார்களெனத் தெரிகிறது. இப்படத்தை ஜெமினி ராமமூர்த்தி டைரக்ட்செய்வார். கே. வி. மகாதேவன் இசையமைப்பார்.

### தெய்வ மங்கை:

மோட்சேசுவர் சித்ராவின் 'தெய்வ மங்கை' என்ற படம் உருவாகுகிறது. கதை வசனத்தை வே. இலட்சுமணன் எழுதியுள்ளார். இப்படத்தில் எம். ஆர். ராதா, ஏ. நாகேஸ்வரராவ், கருணாநிதி, அஞ்சலிதேவி, எஸ். பாலச்சந்தர் முதலியோர் நடிக்கின்றனர்.

### மங்கையின் தியாகம்

சைகா மூவிசாரின் மங்கையின்தியாகம் என்னும் படம் விரைவில் தயாராகவிருக்கிறது. விஜயபுரிவீரன் ஆனந்தன் இப்படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். ராஜசுலோசனா, அசோகன், ராமராவ் ஆகியோர் இதில் நடிக்கின்றனர். கதைவசனத்தை திலகம் நாராயணசாமி எழுதியுள்ளார்.

## கன்னடத்து மின்னொளி.



'திரையுலகில் பத்மினி மின்னிய இடத்தை விஜயலட்சுமி தான் பிடிக்கப்போகிறார் என்று செய்திகள் வருகின்றனவே; ஏன், நான் இருப்பதை மறந்துவிட்டார்களோ ?" என்று கேட்கிறார் சரோஜாதேவி

## சினிமா உலகில்

### 'சிவாஜி'யின் தாயார்

அரங்கநாதன் பிக்சர்சாரின் முதல்படத்தின் துவக்கவிழா அண்மையில் நெப்டியூன் ஸ்டுடியோவில் நடைபெற்றது.

சிவாசி கணேசனின் அன்னையார் திருமதி இராசாமணி அம்மையார் காமிராவை முடுக்கி படம் பிடிப்பதைத் துவக்கிவைத்தார். இவ்விழாவுக்கு சிவாசி கணேசன், எஸ். வி. ரங்கராவ், பிரேம்நசீர் ஆகியோரும் படவுலக பிரமுகர்கள் பலரும் வந்திருந்தனர்.

எம். ஆர் ராதா, சி. கே. சரஸ்வதி, மனோரமா ஆகியோர் நடிக்கும் ஒரு காட்சி படமாக்கப்பட்டது. இப்படத்தில் சிவாசிகணேசன் ஜெமினி கணேசன், சாவித்திரி, ராசசுலோசனா, எம். ஆர். ராதா, சி. கே. சரஸ்வதி, மனோரமா முதலியோர் நடிக்கின்றனர்

கதைவசனத்தை ஆரூர் தாஸ் எழுதுகிறார். பீம்சிங் இப்படத்தை டைரக்செய்வார்.

# அடுத்தவன் மனைவிமீது ஆசைவைத்தான்!

பிங்கிரியா சிலாபத்திலிருந்து சுமார் இருபது மைல் தூரத்தில் இருக்கிறது. இக்கிராமத்திலுள்ள ஒரு தென்னந்தோட்டத்தில் நான் சுப்பிரின்ரென்டென்டாகக் கடமையாற்றிய காலத்தில் எனக்கு 22 வயதுதானிருக்கும். சுமார் முப்பதுஏக்கர் விஸ்தீரணமுள்ள இந்தத் தோட்டத்தில் ஆறு கூலி ஆட்கள் மட்டுமே வேலைசெய்தார்கள். ஆறுபேரிடம் வேலைவாங்கும் எனக்குப் பேர்மட்டும் சுப்பிரின்ரென்டென்ட்.

தோட்டத்தைச் சுற்றிப் பற்றைக்காடு, இந்தக் காட்டுக்குச் சென்று முயல், 'மீமின்னா' என்றழைக்கப்படும் ஒருவகை சிறியமான் ஆகியவற்றை வேட்டையாடுவது தான் எனது பொழுதுபோக்கு.

பிங்கிரியாவிலிருந்து சில மைல் தூரத்தில் மூக்கிளானைக்காடு இருக்கிறது. இந்தக்காட்டுக்கு என்னைப் போல் அனுபவமற்றவர்கள்சென்று வேட்டையாடுவது ஆபத்தான விஷயம். இங்கு பயங்கர மிருகங்கள் வாழுகின்றன என்று கூறினார்கள். வேட்டையாடுவதைத் தொழிலாகக்கொண்டவர்கள் இங்கு அடிக்கடி வருவார்கள்,

சதா முயல்களையும் பறவைகளையும் சுட்டுவந்த எனக்கு பெரிய பெரிய மிருகங்களையும் வேட்டையாட வேண்டுமென்ற ஆசைபிறந்தது. என்னுடைய இந்த ஆவலை மறத்தேலிஸிடம் கூறினேன்.

மறத்தேலிஸ் பிங்கிரியாக்கிராமத்தைச்சேர்ந்தவன். 25 வயதிருக்கும். நல்லபலசாலி. எங்கள் தோட்டத்துக்குத் சமீபமாகவுள்ள பற்றைக்காட்டின் ஒருபகுதியைத் திருத்திமரவள்ளி போட்டிருந்தான். இவனுக்கு வேட்டையாடுவதில் நல்ல அனுபவமுண்டு. நான்பிங்கிரியாவுக்குச் சென்ற சில தினங்களிலேயே நன்கு அறிமுகமாகி விட்டோம். இவனிடம் என்விருப்பத்தைத் தெரிவித்தபோது அவன் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டான். மூக்கிளானைக்காட்டில் யானைகள் கூட இருக்கின்றனவென்றும், சமயத்தில் வெகுவிரைவாக மரங்களில்கூட ஏறவேண்டிவருமென்றும் அவன்பயமுறுத்தினான். நல்ல அனுபவம் பெறு... வரையில் பொறுத்திருக்... கூறினான்டி யோசனை

அவன் கூறியது உண்மையென்பது பின்னால்தான் எனக்குத் தெரிய வந்தது. வேட்டையாடுவதுஒருபெரியகலை. காயம்பட்ட மிருகங்கள் நம்மைத்தாக்காதிருக்க நாம் என்னென்ன முறைகளைக் கையாளவேண்டும், எந்தப்பெரிய மிருகத்தையும்

விஷயமல்ல என்பதைப் புரிந்து கொண்டேன்.

'தற்போதைக்கு நீங்கள் என்னோடுவாருங்கள். பெரிய மிருகங்களை வேட்டையாட வசதிசெய்து தருகிறேன்' என்றான் மறத்தேலிஸ்.

அவனுடைய மரவள்ளித் தோட்டத்தில்மரவள்

கொண்டு அவனோடு புறப்பட்டேன்.

இருவரும் பரணில் ஏறி உட்கார்ந்தோம். விடியப்புறம் மூன்று மணி வரை ஒரு மிருகமும் தென்படவில்லை. தூக்கம் கண்களைச் சுழற்றிக் கொண்டு வந்தது. திடீரென்று வெடிச்சத்தம். திடுக்கிட்டுக் கண்

புறம் இரண்டு மூன்று மணியளவில் எழுந்து வாருங்கள்'

நான் அவனது குடிசையை நோக்கி நடந்தேன். அவனும் கூடவந்தான். அதுசிறிய குடிசையானாலும்மிகவும் அழகாக அமைந்திருந்தது. அந்தக்குடிசையில் ஒரேயொரு அறைதானிருந்தது. அதிகமான தளபாடங்கள் ஒன்றுமில்லை; ஒருகட்டில், இரண்டு கதிரைகள், ஒரு மேசை அவ்வளவுதான் அங்கிருந்த சாமான்கள்.

மறத்தேலிஸ் கதவைத் தட்டியதும் வெளியே வந்தாள் ஒரு இளம்பெண்; அவள்தான் அவன்மனைவியென்று யூகித்துக்கொண்டேன். அவளைத்தவிர வீட்டில் வேறுயாரும் இருக்கவில்லை.

''மகி துரைக்கு அந்தக் கட்டிலை ஒழுங்குசெய்து கொடுப்படுத்துத் தூங்கட்டும். விடியப்புறம் மூன்று மணியளவில் அவரை எழுப்பி பரணுக்கு அழைத்துவா"

அவள் ஓரக்கண்ணால் என்னை மேலும் கீழும் பார்த்தபடியே தலையசைத்தாள், அவன்போய்விட்டான். நான் அறைக்குள்ளிருந்த கட்டிலில்சாய்ந்தேன். அறைக்கதவு திறந்தபடியே கிடந்தது. அதைப்பூட்ட நான்முயலவில்லை. சுமார் பதினைந்து நிமிஷங்களில் கையில் தேநீரோடு மகி உள்ளே வந்தாள்.

"உங்களுக்குவீண்சிரமம்" என்று மரியாதையாகக் கூறினேன்.

''இதிலென்ன சிரமமிருக்கிறது" என்று சிரித்தபடியே கூறிவிட்டுச் சென்றாளவள்.

அவள்சிரித்தபோது கன்னங்களில் குழி வீழ்ந்தது. சுமார் 19 வயதிருக்கும்.



★

**மகியின் கணவனுக்கு வேட்டைமீது உயிர். அவன் இரவில் என்றுமே வீட்டில்தங்குவதில்லை. பருவங்கொளிக்கும் அவளது எழில் பசியெடுத்தது. எதிர்பாராத விதமாக வீட்டுக்கு வந்தான் ஒருவன். பாலைவனத்தின் நிழற்சோலையென்று அவனை நம்பினாள் மகி. ஆனால்...... இடையே முறித்துக் கொண்டு கிளம்பிவிட்டான் அவன். ஏக்கத்தோடு வாசலில் நிற்பதைத் தவிர வேறென்ன செய்வாள் பாவம்!**

★

ஒரேசூட்டில் வீழ்த்துவதானால் எந்த இடத்தில் சுடவேண்டும் என்பவற்றைத்தெரிந்து கொண்டுதான் காட்டில் இறங்க வேண்டும், இரவு நேரங்களில் 'லைட்' அடிக்கும்

ளிக்கட்டைகள் குருத்துவிடும்போது அவைகளைத் தின்பதற்கு மான்கள் கூட்டங்கூட்டமாய் வருமாம். மரவள்ளி மரம் கிழங்குவிட ஆரம்பிக்கும் போது அவைகளைக் கிளறித் தின்

களை அகல விரித்துப் பார்த்தேன். அவன்பரணைவிட்டிறங்கி வேகமாக ஓடிக்கொண்டிருந்தான். நானும்பரணால்இறங்கி அவனைத் தொடர்ந்து சென்றேன். ஆம், அவன் ஒரு மானை

# ஆனால் கண்ணீர்விட்டான் கணவன்-ஏன்?

போது மிருகங்கள் கண் கொடுக்கும். வேட்டையாடுபவனுக்கு மிருகத்தின் கண்கள் மட்டுந்தான் தெரியும். அந்தக்கண்களைப்பார்த்து அது என்ன மிருகம் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். உதாரணமாகப் புலியின் கண்கள் தீப்பந்தம்போல் மஞ்சளாயிருக்கும். காட்டெருமையின் கண்கள் நீலமாயிருக்கும். இந்த விஷயங்களை மறத்தேலிஸ் விளக்கிய போது வேட்டையாடுவது நான்நினைத்ததுபோல் இலகுவான

பதற்குக் காட்டுப் பன்றிகள் வருமாம், இவைகளின் தொல்லையிலிருந்து தோட்டத்தைகாப்பாற்றுவதற்காகத்தோட்டமத்தியில் ஒரு பரண்கட்டியிருந்தான் அவன். அதன்மேல் ஏறி இரவு கண் விழித்திருந்தால் விடியுமுன் எப்படியும் ஒருமானையோ, பன்றியையோ வேட்டையாடலாம்,

அவன் கூறிய இந்தயோசனை எனக்கும் சரியாகவே பட்டது. அன்றிரவு துவக்கும் எஸ். ஜி. பத்திரங்கள் கொஞ்சமும் எடுத்துக்

வேட்டையாடி விட்டான். அதை வேட்டையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. தூக்கக் கலக்கத்தில் நான் ஏமாந்துவிட்டேன்.

மறுநாளும் சென்றேன். முதல் நாள் தூக்கமில்லாததால் சுமார் பத்துமணியளவிலேயே கண்கள் இடுக்க ஆரம்பித்துவிட்டன. அவன் கூறினான்.

'நீங்கள் எனது குடிசையில் போய்ப் படுத்துத் தூங்குங்கள். இப்பொழுது மிருகங்கள் ஒன்றும் வெளியே வராது. விடியப்

பருவ எழில் பூத்துக் குலுங்கும் அவளது தோற்றம் என் உள்ளத்தைக் கிறுகிறுக்கவைத்தது. இருவரும் ஒருவீட்டில் தனியாய் இரவைக் கழிக்கிறோம் என்ற நினைவு இல்லாத எண்ணங்களையெல்லாம் தூண்டியது. ஆனால் அவள் இன்னொருவனின் மனைவி...

நாட்கள் கடந்து கொண்டிருந்தன. அவள் என்னிடம் சரளமாகப் பழகினாள். அவள் மீது என்னை யறியாமலே ஒருவகைப் பாசம்படர்ந்தது. அது



உள்ளதைச் சொ...

# விமர்ச...

## ஒரு பை...
## என்று அ...

முற்றிப்போன தடி...
டன் மூக்கால் பேசும்...
வரிடம் போய் ஒரு ...
வஞானி கேட்டா...
''இவ்வுலகில் கண்டோ...
ளர்கள் அதிகமா அ...
மருத்துவர்கள் அதிக...
என்று, தடிமன் மூக்...
சொல்லிற்று "மருத்...
கள் தான்" என்று.எ...
தாவது தப்பித்தவற்...
வீனமாக இருந்தவர்...
குஇந்த உண்மைதெ...
இலங்கையின் ...
இலக்கிய உலகை எ...
துக் கொண்டாலும்...
தத் தடிமன்காரன்...
தான். அதாவது இ...
யம் என்று சொல்ல...
சிறுகதை, கவிதை, ந...
என்பவற்றை யெழு...
ர்கள் ஒரு சிலரது சி...
களைவைத்துக் கொ...
விமர்சனம் செய்பவ...
தொகையோ அனந்...
தமிழ்படிச்சவன், ...
படிக்கப்போகிறவன்...
ழைப்பற்றிக் கேள்வி...
டவன் எல்லோருமே...
ரிசனர்கள்தான்.
இந்த விமரிசகர்...
பற்றிய முக்கியமான...
மை என்னவென்று...
கள் எழுத்துக்களை...
முழுவதும் முண்டிய...
வாசிக்கின்றது என்...

# நெஞ்சம் ...

தான் காதலோ எ...
வோ......
ஒரு நாள்!
கட்டிலில் புர...
கொண்டிருந்தேன்...
கம் வரவில்லை. உ...
நிறையச் சுமைகளை...
துக்கொண்டிருக்கும்...
து தூக்கம் எப்படி ...
நேரம் 12-மணி...
லாம். வெளியே ய...
நடமாடுவது போ...
மெல்லிய காலடி ஓ...
கேட்டது. தைரிய...
வரவழைத்துக் கெ...
'மகி' என்றேன். '...
என்று கேட்டப...
அவள் உள்ளே வந்...
என்ன கூறுவதெ...
எனக்குத் தோன்ற...
த்ட்டுத் தடுமாறி ...
ணீர் வேண்டும்' ...
றேன்.
அவள் சென்று ...
நேரத்தில் தண்ணீ...
வந்தாள். குடித்துவி...
கிளாசைக் கொடுத்...
அவள் கிளாசை வா...
கொண்டு உடனே ...

...ந்தான்!

இரண்டு மூன்று
...ியளவில் எழுந்து
...ங்கள்'

...ன் அவனது குடிசை
... நோக்கி நடந்தேன்.
...னும் கூடவந்தான்.
...சிறிய குடிசையானலு
...வும் அழகாக அமைந்
...ந்தது. அந்தக்குடிசை
...ஒரேயொரு அறைதா
...ந்தது. அதிகமான
...பாடங்கள் ஒன்றுமில்
...ஒருகட்டில், இரண்டு
...ரகள், ஒரு மேசை
...வளவுதான் அங்கிரு
...சாமான்கள்.

...த்தேலிஸ் கதவைத்
...டயதும் வெளியே வந்
... ஒரு இளம்பெண்.
...தான் அவன்மனைவி
...று யூகித்துக்கொண்
.... அவளைத்தவிர வீட்
...வேறுயாரும் இருக்க
...ல.

...கி துரைக்கு அந்தக்
...டிலை ஒழுங்குசெய்து
...டுப்படுத்துத் தூங்கட்
...விடியப்புறம் மூன்று
...யளவில் அவரை எழு
... பரணுக்கு அழைத்
...

...வள் ஓரக்கண்ணுல்
...ன மேலும் கீழும்
...த்தபடியே தலையசை
...ள், அவன்போய்விட்
.... நான்அறைக்குள்
...த கட்டிலில்சாய்ந்
.... அறைக்கதவு திறந்
...யே கிடந்தது. அதை
...டநான்முயலவில்லை.
...ர் பதினைந்து நிமிஷங்
... கையில் தேநீரோடு
...ள்ளே வந்தாள்.

...களுக்குவீண்சிரமம்"
...று மரியாதையாகக்
...னன்.

...திலென்ன சிரமமிரு
...து" என்று சிரித்த
...ய் கூறிவிட்டுச் சென்
...ள்.

...ள்சிரித்தபோது கன்
...ளில் குழி வீழ்ந்தது.
...ர் 19 வயதிருக்கும்.

...ன்-ஏன்?

... எழில் பூத்துக் குலு
... அவளது தோற்றம்
... உள்ளத்தைக் கிறு
...கவைத்தது. இருவ
...ருவீட்டில் தனியாய்
...வைக் கழிக்கிறோம்
... நினைவு இல்லாத
...ணங்களை யெல்லாம்
...டியது. ஆனல்
...ள் இன்னொருவனின்
...வி...

...கள் கடந்து கொண்
...தன. அவள் என்னி
... சரளமாகப் பழகி
... அவள் மீது என்னை
...மலே ஒருவகைப்
...படர்ந்தது. அது





உள்ளதைச் சொன்னல்!.........

# விமர்சக விண்ணர்களின் தகிடுதித்தம்!

## ஒரு பை இரண்டுபேப்பர் கொண்டு திரிபவன் - லெட்டர் பாட்டில் எழுத்தாளன் என்று அடித்துவைத்திருப்பவன் - எல்லோருமே விமர்சகராகி விட்டால்........,

முற்றிப்போன தடிமனுடன் மூக்கால் பேசும் ஒருவரிடம் போய் ஒரு தத்துவஞானி கேட்டாரம், "இவ்வுலகில் கண்நோயாளர்கள் அதிகமா அல்லது மருத்துவர்கள் அதிகமா" என்று, தடிமன் மூக்கால் சொல்லிற்று "மருத்துவர்கள் தான்" என்று. எப்போதாவது தப்பித்தவறிச்சுகவீனமாக இருந்தவர்களுக்குஇந்தஉண்மைதெரியும்.

இலங்கையின் தமிழ் இலக்கிய உலகை எடுத்துக் கொண்டாலும் இந்தத் தடிமன்காரன் நிலைதான். அதாவது இலக்கியம் என்று சொல்லத்தக்க சிறுகதை, கவிதை, நாவல் என்பவற்றை யெழுதுபவர்கள் ஒரு சிலரது சிருஷ்டிகளைவைத்துக் கொண்டு விமர்சனம் செய்பவர்கள் தொகையோ அனந்தம்.

தமிழ்படிச்சவன், தமிழ் படிக்கப்போகிறவன், தமிழைப்பற்றிக் கேள்விப்பட்டவன் எல்லோருமே விமரிசனர்கள்தான்.

இந்த விமரிசகர்களைப் பற்றிய முக்கியமான உண்மை என்னவென்றல் தங்கள் எழுத்துக்களை ஈழம் முழுவதும் முண்டியடித்து வாசிக்கின்றது என்று அவர்கள் நினைப்பதுதான். வேறு எத்தனையோ பிரச்சனைகளுக்கிடையில் கிடந்து தவிக்கும் பொதுமக்கள் இந்த இலக்கிய விமரிசனங்களையும் விமர்சன விண்ணர்களையும் கவனிப்பதில்லையென்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. தெரியக்கூடாது என்பது என் அபிப்பிராயம். ஏனென்றல். வேறெருவன் தான் பெரியதொரு விஷ்யத்தைச் சாதிக்கிறேனென்று நினைத்து எழுதிக்கொண்டிருக்கும்பொழுது இந்த உண்மை தெரிந்தால் பெரிய மனே வியாதிகள் தோன்றலாம். அதனல் அவர்கள் பாதிக்கப்படலாம். ஜனநாயகம், அபிப்பிராய சுதந்திரம், முதலியவற்றில் நம்பிக்கை கொண்டுள்ளவர்கட்குத் தெரியும் வாசிக்காது விடக்கூடிய சுதந்திரமும் உண்டு என்று. இந்தவிமர்சன விண்ணர்களைப் பல வகையாக வகுக்கலாம் முக்கிய பிரிவினர் ஆங்கிலப் புஸ்தகங்களை வாசிப்பவர்களும் மற்றவன் அந்தப் புத்தகங்களை வாசித்திருக்கமாட்டானென்று நினைப்பவர்களுமே. தாங்கள் எழுதும் கட்டுரை(கஷ்ட உரை) களுக்கிடையே நாலு ஆங்கிலச் சொல்லை அடித்துவிட்டால் போதும், தமக்கு எல்லாம் தெரியும் என்று மற்றவர்கள் நினைப்பார்களென்று இவர்கள் நினைத்துக்கொள்வார்கள். சில வேளைகளில் ஆங்கில மூலத்தைச் சரியாக விளங்காது தமிழில் எழுதும் பொழுது தான் குட்டு வெளிப்படுவது வழக்கம்.

இரண்டாவது பிரிவினர் விமர்சனம் செய்வது ஒரு புதுமுறையாக விருக்கும். அதாவது, இவர்கள் சின்னப் பிள்ளைகளாக இருந்த காலத்தில் வந்தசில பத்திரிகை வெட்டுக்களை வைத்துக்கொண்டு அதனை அறிமுகம் செய்து வைப்பதும் அறிமுகமாவதற்கு முன்னரே விமர்சனம் செய்வதாகும். அறிமுக தோரணையில் அமைந்த விமர்சகர்கள் தங்களை நச்சினர்க்கினியர் பதவிக்கு உயர்த்தி விடுவதுமுண்டு. பண்டிதர்களுக்கிடையே மகாவித்துவான்களுக்குள்ள இடத்தினை இவர்கள் இக்கால எழுத்தாளரிடையே தமக்கு ஏற்படுத்தியுள்ளனர். சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் என்ற முறையில் இவர்களது அறிவைப் புறக்கணிக்க முடியாது. ஆனல் இன்னெரு விமர்சன வகையிருக்கின்றது. அதன் எண்ணப்படி தமிழில் தோன்றிய முதல் இலக்கியம் பிரதாப முதலியார் சரித்திரம்தான். பாலபண்டித பரீட்சைக்கு அப்பிளிக்கேசன் காசு கட்டினவன் தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியத்தையும் எவ்வாறு விளங்காப் பொருளாக இருந்தாலும் கட்டினகாசுக்கு இழுக்கு வரக் கூடாதென்பதற்காக அவற்றைப்பற்றி அடித்துப் பேசுவானே அதேபோல் இவர்கள் கு. ப. ராவைப் பற்றியும் வ. வே. சு. ஐயரைப்பற்றியும்பேசிக்கொள்வார்கள். இங்குள்ள சைவர்களிடையே கற்பூரமணத்துக்குள்ள மதிப்பை இவர்களிடையே வ. வே. சு. ஐயரின் குளத்தங்கரை அரசமரம் பெற்றிருக்கிறது.

இன்னெரு வகையுமொன்றுள்ளது. வேறென்றும் எழுதவழியும்திறமையுமில்லாதுபோக முடிவில் விமர்சனத்துக்கு வருவார்கள். எப்படியாவது லெட்டர் பாட்டில் 'எழுத்தாளன்' என்று அடிப்பதற்காக எழுதத் தொடங்கியவர்கள் காலப்போக்கில் தம்மை எழுத்தாளரராகவே கருதிக்கொண்டு ஒரு பையும் இரண்டு பத்திரிகையும் கொண்டு திரிகின்றனர். இவ்வாறன இரண்டு எழுத்தாளர் சிண்டைப் பிடிக்கும் பொழுது (இதற்குப்பெயர்சர்ச்சை) ஞான சூன்னியத்தின் சிகரத்தைக்காணலாம்.

ஆனல் இவர்கள் எல்லோரும் மற்றவன் பத்திரிகையிலே எழுதுபவர்கள் தானே. இந்தக் கஷ்டத்தைத் தீர்ப்பதற்குச் சிலர் தாங்களே பத்திரிகை நடத்தத் தொடங்கி விடுவதுமுண்டு,

விமர்சனத்தைப்பற்றிச் சொல்லவே வீங்கி வெடிக்கும் நமதுஎழுத்தாளர்கள் தங்கள் விமர்சனத்தையும் இங்கே எடுத்துக்காட்டிவிடுவோனே என்று பயப்படவேண்டாம். அப்பத்தைப் புட்டுக் காட்டுவது தமிழன் வேலையல்ல.

# நெஞ்சம் துடிக்க நிலைப்படியில் நின்றள்

தான் காதலோ என்னவோ......

ஒரு நாள்!

கட்டிலில் புரண்டு கொண்டிருந்தேன். தூக்கம் வரவில்லை. உள்ளம் நிறையச் சுமைகளைவைத்துக்கொண்டிருக்கும் போது தூக்கம் எப்படி வரும். நேரம் 12 மணியிருக்கலாம். வெளியே யாரோ நடமாடுவது போன்று மெல்லிய காலடி ஓசை கேட்டது. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு 'மகி' என்றேன். 'ஏன்' என்று கேட்டபடியே அவள் உள்ளே வந்தாள். என்ன கூறுவதென்றே எனக்குத் தோன்றவில்லை. தட்டுத் தடுமாறி 'தண்ணீர் வேண்டும்' என்றேன்.

அவள் சென்று சிறிது நேரத்தில் தண்ணீரோடு வந்தாள். குடித்துவிட்டுக் கிளாசைக் கொடுத்தேன், அவள் கிளாசை வாங்கிக் கொண்டு உடனே செல்லவில்லை என்னையே வெறிக்கப்பாத்துக் கொண்டுநின்றள், நானும் அவளைநிமிர்ந்து பார்த்தேன்.

"தண்ணீர் மட்டுந்தானு, அல்லது வேறுஏதாவ்தும் வேண்டுமா?" அவள் குரலில் பதற்றமும் கீறலும் காணப்பட்டன.

"மகி மகி.." என்னல் பேசவேமுடியவில்லை. அடுத்த கணம் என்மார்பில் அவள் புதைந்து கிடந்தாள்.

.நீங்கள் என்னைத் துரோகி, என்பீர்கள் என் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்களோ எனக்குத் தெரியாது. மறத்தேலிஸ்சுக்கு வேட்டைதான் உயிர், அவன் இரவில் என்றுமே வீட்டில் தங்குவதில்லை. அவள் தவிப்பு அவளுக்குத்தான்தெரியும், மணமாகிஇரண்டுவருஷமா...."இன்றுதான்மணவ்ாழ்க்கையின் உண்மையான சுவையைப் புரிந்துகொண்டேன்" என்றுஅவளேஎன்னிடம் கூறினள். அந்தவழியில் நான் பாபம் செய்யவில்லை. நான் புண்ணியம்தான் செய்திருக்கிறேன். எங்கள்போக்குகாலக்தியில் மறத்தேலிஸ்ுக்குப் புரிந்துதானிருக்க வேண்டும். ஆனல் அவன் அதைப்பற்றிப் பொருட்படுத்தவில்லை.

தோட்டம்வேறெருவருக்கு விற்கப்பட்டதால் நான்பிங்கிரியாவை விட்டுப் புறப்படவேண்டியேற்பட்டு விட்டது. நிலைமையை விளக்கியபோது மகி கண்ணீர் விட்டு அழுதாள். மறத்தேலிஸின் கண்களும் கலங்கின.


"உங்கள் பிரிவு மகியை என்னை விட்டு நிரந்தரமாகப் பிரித்துவிடுமோ என்று எனக்குப் பயமாயிருக்கிறது" என்று மறத்தேலிஸ் மனந் திறந்து கூறினன்.

"மறத்தேலிஸ், பஸ்நிலையத்துக்குக்குப் போவதற்கு எனக்கொரு வண்டி வேண்டுமே" என்றேன்.

அவன் வண்டி கொண்டுவரச் சென்றன். நான் மகியைப் பார்த்தேன். அவள் முகம் அழுதழுது வீங்கியிருந்தது. நான்ஆதரவோடு 'மகி' என்றழைத்தேன். அவள் என் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு ஓவென்று கதறினள். அவளைச் சமாதானப்படுத்த முடியாமற் போய்விட்டது.

வண்டியில் ஏறினேன். அவள் வாசற் திரையைப் பிடித்தபடியே சோகமே உருவாக நின்றள். அவளை மறுபடி பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் சிடைக்கவேயில்லை.

[டபம், கதை கற்பனை]



மனைவி:- அவன்ரை பல்லை உடைக்காமல், கொழும்பிலைஒரு மாசம் இருந்திட்டுவந்துமோனைப்பற்றிப் புழுகிறயளோ...

கணவன்:- என்னடி வந்ததும்வரா்ததுமாய்த் துவங்கிருய். ஆர்ரைபல்லைஉடைக்கச் சொல்லுருய்?

மனைவி:- எல்லாம் உங்கள் பிள்ளையின்ரை பல்லைத்தான். கொழும்பிலைஅவன் 'வைப்பு' வைச்சிருக்கிருன் எண்டெழுத உங்களுக்கு எப்படித்தான் கை வந்ததோ...

கணவன்:- வைப்பா? அடி கிழடே, பொடியன் பெரியாளாகியிட்டான் எண்டதைச் சொல்ல 'பைப்பு' வைச்சிருக்கிறுன் எண்டல்லோஎழுதின்னன். பைப்பு ........இந்தப் புகைக்கிற பைப்படி.

# டெலிபோன் பேச அதிசய மீன்கள்!

## மீன்களைப்பற்றிய ரசமான ஆராய்ச்சிகள்

மிருகங்களைப் பழக்கி மனிதன் தன் இஷ்டம் போல் ஆட்டி வைப்பதை நாம் பார்த்திருக்கிறோம்- கேட்டிருக்கிறோம். அவ்விதம் மீனையும் பழக்கலாமா? ஏன் முடியாது. கட்டுரையைத் தொடருங்கள். ருசிகரமான பல தகவல்கள் கிடைக்கும்.

பேராசிரியர் ஜே. பி. புரலோவ் ரஷ்ஷியாவின் சிறந்தவிஞ்ஞானி. இவர் மீன்களை டெலிபோன்கூப்பாடுகளுக்குப் பதிலளிக்கப்பழக்கி வைத்தார். ஒரு கண்ணாடிப் பெட்டியில் நீரை வார்த்து அதற்குள் மீன்களைவிட்டார். அந்தப் பெட்டிக்குள் வளைந்து கொடுக்கக்கூடிய மின்சாரக்கம்பிகளை இணைத்தார். அந்தக் கம்பிகள்மத்தியில் மீன்கள் ஓடியாடக் கூடியதாகவிருந்தது, நீருக்குள்ளே ஒரு டெலிபோனும் வைக்கப்பட்டது. ஒரு விசையைஅழுத்தியவுடன் டெலிபோன் மணியடிக்கும். அதே நேரத்தில் உள்ளே இணைக்கப்பட்டிருக்கும் கம்பிகளில் மின்சாரம் பாய்ந்து மீன்களைத் தாக்கியது. மின்சாரத்தினால் தாக்கப்பட்ட மீன்கள்துடிதுடித்து ஒருவகை சப்தத்தை எழுப்பியதாம். மீன்களை ஒரேயடியாகக் கொல்லக்கூடிய மின்சாரம் கம்பிகளில் பாய்ச்சப்படுவதில்லை,

இப்படி நாற்பது தடவை ஒத்திகை பார்த்த பின் பேராசிரியர் புரலோவ், மின்சாரம் பாய்ச்சுவதை நிறுத்திவிட்டு ஒலியின் மூலம் 'சிக்னல்' கொடுத்தார். ஏற்கனவே பழக்கப்பட்டிருந்த மீன்கள் இப்பொழுது ஒலியைக் கேட்டதுமே டெலிபோனுக்குப் பதிலளிக்கத் தொடங்கி விட்டனவாம்.

கடலோரமாகவோ, ஆற்றோரமாகவோ மீன்பிடியாளர் நடந்து செல்வது மீன்களது காதுக்குக்கேட்குமா? நாம் பேசுவதை அவைகளால் புரிந்து கொள்ள முடியுமா? மீன்களது கண்பார்வை எப்படி? அவைகள் நிறங்களைப் பிரித்து உணர்ந்து கொள்ளுமா? இத்தகைய ஆராய்ச்சியில் நீர்வாழும் ஜந்துகள் பற்றிய ஆராய்ச்சி நிபுணர்கள் தமது கவனத்தைச் செலுத்தியிருக்கிறார்கள்.

மீன்களது கேட்கும் சக்தி இப்பொழுது சந்தேகத்துக்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு விஞ்ஞானிகள் குருட்டு மீன்களை வளர்த்தார்கள். உணவு நேரத்துக்கு இவர்கள் கரண்டிகளைத் தட்டி ஒலி எழுப்புவார்கள், அல்லது 'விசில்' அடிப்பார்கள். உடனே இந்தக்குருட்டுமீன்கள்ஓடி வந்துஉணவைச்சாப்பிடும்

மீன்களது பார்வையைப்பற்றி கொன்ரர்ட்ஹேட்டர் என்ற விஞ்ஞானி ஆராய்ச்சி செய்தார். ஒரு சிறிய வட்டத்தையும், கொழுக்கி வடிவத்தையும் அமைத்து, மீன்களுக்கு உணவு கொடுக்கும் போது அவைகள் வட்ட வடிவைச்சுற்றிக் கொண்டு வந்தால் உணவு கிடைக்கக் கூடியதாகவும். கொழுக்கி வடிவத்தால் வந்தால் உணவு கிடைக்காதமுறையிலும் ஏற்பாடு செய்தனர். அவைகள் நாளடைவில் வட்டவடிவத்தைத் தேடிச்சென்று அதன் மூலம் உணவு பெறப்பழகிக் கொண்டன,

ஒன்றை அறிந்து கொள்ளும் தன்மை மீன்களிடம் காணப்படுகிறதென இன்னொரு ஆராய்ச்சியாளர் கூறுகிறார். தினமும் அவர் புழுக்களடங்கிய பெட்டியுடன் மீன்கள் வளர்க்கும் அறைக்குள் சென்றவுடன் அவைகள் ஆர்வத்தோடு துள்ளிக் குதிக்கின்றனவாம். கையில் புழுப்பெட்டிஇல்லாதபோது அவைகள்சாதாரணமாகஎவ்வித ஆர்வமும் காட்டாது இருக்கின்றனவாம். இதே விஞ்ஞானியிடம் மற்றொருமீன் இருக்கிறது. நீரில் ஒரு புழுவைப்போட்டால் அதை அந்த மீன் உண்ணாதாம். ஆனால் அந்தப்புழுவை ஒரு நூலில்கட்டிப் போட்டால் 'லபக்' கென்று கௌவிக்கொள்ளுகிறதாம்.

மீன்கள் புத்திக் கூர்மையுள்ளன வென்றால் நம்புவது சிறிது கடினந்தான். ஆனால் நேரில் கண்டவற்றை நம்பாதிருப்பது எப்படி? 'பாத்' என்ற நீர்நிலையில் ஏராளமான பொன்நிற மீன்கள் வளர்க்கிறார்கள். தண்ணீருக்கு மேலே ஒரு கனமற்ற மேடை அமைக்கப் பட்டிருக்கிறது.இந்த மேடையில் எறும்புகள் வளர்க்கிறார்கள். மேடையின் மேல் நிறைய எறும்பு முட்டைகள் பரவிக் கிடக்கும். இந்தமேடையின் ஒரு முனையில் ஒருநூலைக் கட்டித் தண்ணீருக்குள் தொங்க விட்டிருக்கிறார்கள், தினமும்உணவு உண்ணும் நேரத்தில் மீன்கள் நீருக்குமேலேவந்து இந்த நூலைக்கௌவி இழுக்கின்றன. எறும்பு முட்டைகள் தண்ணீருக்குள் வீழ்ந்ததும் அவைகள் அவற்றைச் சாப்பிடுகின்றன.

ஒருவர் தனது வீட்டிலேயே ஒரு சிறிய நீர்த்தேக்கத்தை அமைத்து மீன்வளர்க்கிறார். அவரைக்கண்டதும் மீன் நீருக்கு மேல் சுமார் இரண்டடி உயரத்துக்குத் துள்ளிக் குதிக்கும். இந்த அதிசயத்தைப் பலர் வந்து பார்வையிடுவதுண்டு. இதைப் பற்றி அவரிடம் கேட்டபோது, ஒரு புழுவை நூலில்கட்டி நீருக்குள் விட்டு மீன்வாயில் அகப்படாதவாறு அங்குமிங்கும் இழுத்துச் செல்வாராம். புழு அகப்படும்வரை மீனும் விடாப்பிடியாகச் சுற்றிக் கொண்டேவருமாம்.நீருக்குமேல் புழுவை எடுத்ததும் மீன் துள்ளிக்குதித்ததாம். காலகதியில் அவரைக்கண்டாற் போதும், மீன் துள்ளிக்குதிக்க ஆரம்பித்துவிட்டது.

"புதினம்"

இதழ்களை அலங்கரிக்கும்

புளொக்குகளைத்

திறமையாகவும் விரைவாகவும்

தயாரித்தவர்கள்

கொழும்பு ஸ்ரூடியோ

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

உங்களுக்கு வேண்டிய எல்லாவிதமான புளொக்குகளுக்கும் எம்மிடம் வாருங்கள்.

# உலக நடப்பு

## [கிருஷ்ணபிள்ளை மாஸ்டரும் சின்னையா அண்ணையும்]

**கிருஷ்ணபிள்ளை மாஸ்டர்:** என்ன சின்னையா அண்ணை, இந்தநேரத்திலே; பொழுதும் படப்போகுது?

**சின்னையா:** சும்மாவந்தனான்– உங்களைப்போலை, படித்தவர்களோடை கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்தால், ஏதும் புதினம் அறியலாம் என்றுதான் வந்தேன். உலகப்பிரச்சினைகள் எல்லாம் எப்பிடியிருக்கு? உலகயுத்தம் வரக்கூடிய அறிகுறிகள் ஏதாவது இருக்கோ?

**கிரு:** இன்றைய உலகசமாதானம் இரண்டு மனிதரில் மட்டும் தங்கியிருக்கு என்பது மட்டும் உண்மை,

**சின்:** அமெரிக்கத் தலைவர் கெனடி, ரூசியப் பிரதமமந்திரி குருஷ்சேவ் ஆகிய இரண்டு பேரிலுந்தானே?

**கிரு:** ஓமோம்– உலகம் இன்றைக்கு இவை இரண்டு பேரினுடைய தலைமையில் இரண்டாகப் பிளவுபட்டுப் போயிருக்கு; இந்தமாதிரி இரண்டு கோஷ்டிகளாக, அணிவகுத்துக் கொண்டிருந்தால், இரு பகுதியாருக்குமிடையே அவநம்பிக்கையும் போட்டியும் வளர்ந்து, எந்தவொரு சிறியசம்பவமும் உலக யுத்தத்தைக்கிளப்பிவிடும் என்பதுதான்.

**சின்:** அதுசரிமாஸ்டர், அவையிரண்டு பேரும் கிட்டடியில் சந்தித்தவையெல்லே - உச்சி மகாநாடுகூடி! அதென்னமாஸ்டர், அவ்வளவு திடீர் என்று கூடி, அப்பிடியென்ன பேசி முடிச்சவை? ஆக இரண்டு நாள்தான்கூடினவை யென்று தான் படிச்சனான்.

**கிரு:** 'உபயோகமான பேச்சு வார்த்தைகள்' எனஅழைக்கப் பட்டாலும், அது அவ்வளவு உபயோகமாகவில்லை என்பது தெளிவாக இருக்குது. இரு தலைவர்களும் தங்கள் நாட்டு மக்களுக்கு விடுத்த தனித்தனி அறிக்கைகளும் ஓரளவு நிதானமாய்த்தான் இருந்தன. இருதரப்பாரும் தங்கடை கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும், ஒருவரையொருவர் அளவிடவும் இந்தமகாநாடு உதவியது என்பதுதான் [illegible]மிச்சம்.

**சின்:** அதுசரிமாஸ்டர்; அவ்வ இரண்டுபேரும் சந்தித்ததால் எப்படியும் உலகத்திலிருக்கும் யுத்தபயம் கொஞ்சம் குறைந்திருக்குந்தானே. இப்ப, பழையபடி கொங்கோவும், சோம்பேயின் பெயரும் அடிபடுகுது ஏதோ இணக்கத்துக்கு வருகிறான்கள் போலை...

**கிரு:** நீ சரியாய்த்தான் சொன்னாய் அண்ணை. கொங்கோ பிரச்சினையும், லாவோஸ்பிரச்சினையும் அந்தந்த நாட்டுத் தலைவர்களின் பாராட்டத்தக்க நடத்தைகளால் சுருக்கமான ஒருமுடிவுக்கு வந்துவிடும் என்று நம்ப இடம் இருக்கண்ணை. கொங்கோவில் சோம்பே என்ற கடங்காப்பகுதியின் தலைவரை'மறியல்' செய்து வைத்திருந்தார்களல்லவா, மத்திய அரசாங்கம்- லியபோஸ்ட்வில் அரசாங்கத்துக்கும், ஸ்ரான்லிவில் அரசாங்கத்துக்கும் உடன்பாடு ஏற்பட்டு, கொங்கோ பாராளு மன்றத்தைக் கூட நீண்டகால இடைவேளைக்குப்பிறகு இப்போது கூட்டப் போறார்களாம். சோம்பே லியப்போல்ட்வில்அரசாங்கத்துடன் (அதுதான் மத்திய அரசாங்கத்துடன்)ஒத்துழைப்பதாகவும் தமது பகுதியிலிருந்து பிரதிநிதிகளை பாராளுமன்றக்கூட்டத்துக்கு அனுப்புவதாகவும் சொல்லித்தான் விடுதலையடைந்து, தனது இடத்திக்கு திரும்பியிருக்கிறார். இந்தச்சம்பவங்கள் எல்லாம் சமாதானத்துக்கான நல்லஅறிகுறிகள் தானே!

**சின்:** அதுசரி, இந்த லாவோஸ்...

**கிரு:** அங்கையும்'சூரிச்' என்ற இடத்தில் கூடியமூன்று இளவரசர்களும் கூட்டரசாங்கம் சம்பந்தமாக அடைந்த ஒற்றுமையையும் போற்றவேண்டியதாய்இருக்கு.கொங்கோ, லாவோஸ் ஆகிய இரண்டு நாடுகளிலும் அந்நிய நாடுகளின் தலியீட்டைக் குறைத்து, அந்தந்த நாட்டில் உள்ள தலைவர்கள் தமக்குள் இனியும் ஒற்றுமைகாணமுற்படாது விடுவார்களானால், இந்தநாடுகள் மீண்டும் சர்வதேச சதுரங்கத்தில் வெறுங்காய்களாக உருட்டப்பட்டு அவை மீட்சிபெற முடியாதஅளவுமிகவும்சீர்கேடான நிலைமையை அடையவேண்டி வரும்,

# சிறுவனிடம் தோற்ற மகாவித்துவான்!

## பழிக்குப் பழிதீர்க்க காதை அறுத்தான்!


குமாரவேள் சிறு பையனானாலும் புத்திசாலி. அவன் தந்தை நடராசனுருக்கு ஒரு காது இல்லை. எப்பொழுதோ யாராலோ அறுக்கப்பட்டது என்பதுமட்டுந்தான் அவனுக்குத் தெரியும். ஏன்? என்ற விபரம் அவனுக்குத் தெரியாது அப்பாவிடம் கேட்பதற்கும் பயம்.

மெல்ல அம்மாவிடம் சென்று விபரத்தைக் கேட்டான். முதலில் சிறிது தயங்கிய அம்மா, அப்பாவின் காது அறுபட்ட விபரத்தைக் கூறினாள். அவள் கூறியது இதுதான்:

பத்து வருடங்களுக்கு முன் ஒரு படித்த பெரிய அறிவாளி விஜயபுரிக்கு வந்தார். அவர் அரசனிடம் சென்று தன்னைக் கேள்விகேட்டு யாரும் ஜெயிக்க முடியாது என்று சவால் விட்டார். ஊரில் உள்ள படித்தவர்களெல்லாம் போட்டி போட முன் வந்தனர். ஆனால் அந்த அறிவாளி ஒரு நிபந்தனை விதித்தார். தன்னிடம் தோல்வியுற்றவர்களது ஒரு காதை அறுத்துவிடுவதாகவும் தன்னுடைய காதை வென்றவர் அறுக்கலாமென்றும் கூறினார். நிபந்தனைக்குட்பட்டுப் பலர் சென்று போட்டியிட்டனர். ஆனால் அந்த அறிவாளியையாராலும் வெல்ல முடியவில்லை. காது அறுபட்ட நூற்றுக்கணக்காணவர்களில் குமாரின் அப்பா நடராசனும் ஒருவர்.

கதையைக் கேட்ட குமாரவேளுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. மறுநாள் காலையில் யாருக்கும் சொல்லாமல் அரண்மனைக்குச் சென்றான். அந்த அறிவாளியுடன் தான் போட்டியிட வந்திருப்பதாக அறிவித்தான்.

சிறுபையன் ஒருவன் தன்னுடன் போட்டியிட வந்திருப்பதைக் காண அந்த அறிவாளிக்குச் சிரிப்புத்தான் வந்தது. சிறுவனின் துணிச்சலைக் கண்டு வியந்த அரசன் வீணாகக் காதை இழக்காமல் திரும்பிப் போய்விடும்படி ஆதரவோடு கூறினான். குமார் சம்மதிக்கவில்லை.



"தந்தையை அவமதித்தவரைப் பழிக்குப் பழிவாங்குவது மகனின் கடமையல்லவோ" என்று கூறி அரசனை வணங்கினான்,

"சரி நீ என்ன கேட்கப்போகிறாய்? கேட்பதைக் கேள்; வீணே நேரத்தை விரயம் செய்யாமல்" என்றார் அந்த அறிவாளி.

நிலத்திலிருந்து கொஞ்ச மணலை அள்ளினான் குமாரவேள். "இதிலிருக்கும் மணலைக் கணக்கிட்டுக் கூறுங்கள் பார்க்கலாம்"

அறிவாளி திகைத்துப் போனார், மணலை எப்படி எண்ணுவதென்று யோசனை செய்தார்.

குமாரவேள் சவால் விட்டான், "ம்.. ...சீக்கிரம் சொல்லும். உம்மால் முடியாவிட்டால் பதிலை நான் கூறட்டுமா?"

"ஒரு பிடி மண், இந்த விடை தெரியாத நீர்தான் பெரிய அறிவாளியோ! எங்கே காட்டும், உமது காதை, அப்படியே ஒட்ட அறுத்து விடுகிறேன்" என்று கூறினான் குமாரவேள்.

அறிவாளியின் கண்கள் கலங்கின. தனது காதைப்பற்றிக் கூட அவர் கவலைப்படவில்லை. ஒரு சிறுவனிடம் தோற்றுவிட்டேனே என்றுதான் அவர் கவலைப்பட்டார். அறிவாளியின் காதை அறுத்த குமாரவேள் வீடு சென்றதும் அவனது அப்பா நடராசனார் பெருமையோடு அவனைத் தழுவிமுத்தமிட்டார்.

---

# கோழி திருடிய கள்ளி

## நீதிபதியின் புதிய தந்திரம்.

கனகம் தன் கோழியை எதிர் வீட்டுக்காரி கொன்றுதின்று விட்டாள் என்று கோட்டில் வழக்குத் தொடர்ந்தாள்.

எதிர் வீட்டுக்காரி தான் அந்தக் கோழியைக் கண்ணாலேயே பார்த்ததில்லையென்று சாதித்தாள். "அப்படி நான் கொன்றிருந்தால் அக்கோழியின் இறைக்கைகளை வீட்டுக்கு வெளியே இவள் கண்டிருக்கமாட்டாளா? இவள் என்மீது வீண்பழி சுமத்துகிறாள்" என்று கூறினாள் சின்னம்மா.


நீதிபதி கேட்டார்

"இதற்கு ஏதாவது சாட்சியம் உண்டா?"

இருவரும் இல்லையென்றனர். 'சாட்சியமில்லாத இந்த வழக்கைத் தள்ளிவிட்டேன்' என்றார் நீதிபதி.

இருவரும் நீதிமன்றத்தை விட்டு வெளியேறும் போது நீதிபதி "கோழியின் இறக்கை ஒட்டிக் கொண்டிருப்பதையும்கவனியாமல், கோழியைக் கண்ணாலும் பார்த்ததில்லையென்று சாதிக்கிறாளே அக்கள்ளியைப் பிடித்து வாருங்கள்" என்று உரக்கக் கூறினார்.

கோழியைத் திருடிய சின்னம்மா நடு நடுங்கிப் போய்த் திரும்பிப் பார்த்தாள். அவளையறியாமலே அவள் கைகொண்டையில் இறக்கை இருக்கிறதாவென்று வருடிப் பார்த்தது. இந்த யுக்தியால் கோழியைத் திருடியவள் அகப்பட்டாள். அவள் குற்றத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால் நூறு சவுக்கடி கொடுப்பதாக நீதிபதி பயமுறுத்தினார். கடைசியில்தான் திருடியதை ஒப்புக்கொண்டு இறக்கைகளைத்தலையணையில் மறைத்து வைத்திருப்பதாகக் கூறினாள் சின்னம்மா.



கோழிக்கான விலையையும், அபராதத் தொகையையும் கோழியின் சொந்தக்காரியான கனகத்திடம் கொடுக்கும்படி தீர்ப்பளித்தார் நீதிபதி.

---

# உங்களுக்குத் தெரியுமா?

இலங்கையை ஆண்டபார்த்திபன் என்ற அரசன் மாட்டிறைச்சி உண்பவர்களுக்குத் தண்டனை விதிக்கும்படிசட்டம் செய்தான்:

* *

ஒரு நாளில் 2500 கலன் இரத்தத்தை நமது இருதயம் வெளியே தள்ளுகிறது. ஒருவனுடைய வாழ்நாளில் இருதயம் வெளியே தள்ளும் இரத்தம் 6 கோடி 50 லட்சம் கலன் ஒரு வருடத்தில் இருதயம் 4 கோடிமுறை அடிக்கிறது.

* *

உண்மை ரஷ்யாவை உலகின் முன்வைத்தவர் கொகேல். கொகேலுடைய முழுப்பெயர் நிக்கோலிவாஸ்ஸிலிவிச் கொகேல். இவர்தான் ரஷ்ய வசன இலக்கியத்தின் ஆரம்ப கர்த்தா. இவர் 1809-ம் ஆண்டு பிறந்தார். இவர்பிறந்த ஆண்டில்தான் உலகின் பலபகுதிகளிலும் பெரிய பெரிய அறிஞர்கள்தோன்றினர். சாளிஸ் டாவின், அல்பேட் டென்னிஸன், ஏபிரஹாம் லிங்கன் எட்கார்ஆலன்போ, கிளாட்ஸ்டோன் ஆகிய மனிதமாணிக்கங்கள் இவர்காலத்தவர்களே.

* *

உலகில் மிகப்பெரிய மணிக்கூண்டு கனடா, மொன்ட்றீல் நகரிலுள்ளது. இதன் முகப்பு,'பிக்பென்' மணிக்கூண்டினதைக் காட்டிலும் ஆறு மடங்கு பெரியது. இதற்கு மூன்று முன்புறங்களுண்டு. ஒவ்வொன்றின் குறுக்களவும் 60 அடி, இந்த மணிக்கூண்டு யந்திரத்தின் நிறை ஆறு தொன். நிமிடங்காட்டும் இலக்கங்களுக்கிடையே உள்ள வெளி 3 அடி. நிமிடக் கம்பியின் நீளம்30 அடி. அதன் நிறை 2500 ருத்தல். ஒரு வருடத்தில் நிமிடக்கம்பி 312 மைல் சுற்றி வருகிறது.

* *

லோரென்கோ, மாகியூஸைச் சேர்ந்த ஒரு ஆபிரிக்கப் பையனின் உயரம் 7 அடி 5அங்குலம். இவனுக்கு 16 வயதுதானாகிறது. இவனது நிறை 111 ருத்தல். காற்பாதம் 16 அங்குலம். கை 13 அங்குலம். பையன் பெரியவனாகும் போது எப்படியிருப்பானோ......

* *

ஒருகன மைல் கடல் நீரில் 50 லட்சம் பவுன் பெறுமதியான தங்கம் இருக்கிறது. இதனை எடுப்பதற்குத் தங்கத்தின் விலையிலும் பார்க்க ஐந்து மடங்கு அதிகம் செலவாகுமென்று கூறப்படுகிறது.

---

## மூளைக்கு வேலை!

ஆயிரம் ரூபாயையொவ்வொரு ரூபா நோட்டுகளாக மாற்றி வைத்துக்கொள்ளுங்கள். ஒரு ரூபாயிலிருந்து ஆயிர ரூபாய் வரை எவ்வளவு தொகைகேட்டாலும் பேசைத் திறக்காமல் பேசுகளாகவே கொடுக்கக் கூடிய விதமாக பத்துப் பேசுகளில் மட்டும் பணத்தைப் பிரித்துப் போட்டுவைக்க முடியுமா?

உதாரணம்: ஒரு ரூபாய் ஒருவர் கேட்டால் ஒரு ரூபாய் கொண்ட பேசைக் கொடுக்க வேண்டும். 2 ரூபாய் கேட்டால் 2 ரூபாய் கொண்ட பேசைக் கொடுக்க வேண்டும். 10 ரூபாய் கேட்டால் இரண்டோ மூன்றோ பேசுகளைச் சேர்த்துக்கொடுக்கலாம். ஆயிரரூபாய் கேட்டால் 10 பேசுகளையும் கொடுக்க வேண்டும்.

விடை: அடுத்த இதழில்

* *

## சென்றகிழமை விடை

எட்டுக் கலன் தகரத்திலுள்ள எண்ணெய்யில் முதலில் மூன்று கலன் எண்ணெய்யை எடுத்து ஐந்து கலன் அளவையில் ஊற்றுங்கள். மறுபடியும் மூன்று கலன் எண்ணெய்யை எடுத்து ஐந்து கலன் அளவையில் ஊற்றுங்கள், இப்பொழுது மூன்று கலன் அளவையில் ஒரு கலன் எண்ணெய் மிகுதியிருக்கிறதல்லவா? அதை நாலு கலன் கேட்பவரிடம் கொடுங்கள். 5 கலன் அளவையிலிருக்கும் எண்ணெய்யில் மூன்று கலன் அளவையால் 3 கலன் எண்ணெய்யை அளந்து கொடுங்கள்.

நீங்களே சொல்லுங்கள்

# இறந்து போனுனே, அவள் கணவன் அவனே மீண்டும் வந்தான்!

## மறுமணம் செய்து விட்டாள் மனைவி

கணேஷ் சிறுவயதிலேயே சிங்கப்பூருக்குப் போய் விட்டான். அங்குபோய்த் தனதுசொந்தமுயற்சியால் படித்து நல்ல உத்தியோகத்திலும் அமர்ந்தான்.

இப்பொழுது அவன் வாலிபப்பருவத்தைஅடைந்து விட்டான். பலவருடங்கள் சிங்கப்பூரில் வாழ்ந்தாலும், இலங்கைக்குத் திரும்பிச்சென்று சொந்த ஊரில் நல்ல இடத்தில் கல்யாணம் செய்ய வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. ஆறுமாசலீவில் ஊர்திரும்பினுன்.

கையில் பணமோடு திரும்பியதால் கல்யாண மார்க்கட்டில் அவனுக்கு நல்ல கிராக்கியிருந்தது, இரண்டுமாச முயற்சிக்குப்பின் நல்ல இடத்தில் அவனுக்குப் பெண்கிடைத்தது.

திருமணம் நடந்தமறுமாசமே அவன் சிங்கப்பூருக்குச் செல்லவேண்டியிருந்தது. பெண்ணின் பெற்ருேர் வருந்திக் கேட்டுக் கொண்டதால் அவன் தனியாகவே சிங்கப்பூருக் நக் சென்ருன். ஆறுமாசத்தில் பெண்ணையும் அழைத்துக்கொண்டு சிங்கப்பூர் வருவதாகப் பெண்ணின் பெற்ருர் கூறினர். கண்ணீருக்கிடையில் மனைவியைப்பிரிந்து கப்பலேறினுன்கணேஷ்.

இரண்டாவது யுத்தம் இடையே குறுக்கிட்டதால் திட்டம் சிதறியது. சிங்கப்பூரை முதலில் ஜப்பான்காரன் பிடித்ததும் பிறகுவெள்ளைக்காரன் திருப்பிப் பிடித்ததும் எல்லோருக்குந் தெரியும். கடிதத்தொடர்புகள் அற்றுப்போய் விட்டன வருடக்கணக்காக. பிரிட்டிஷார் சிங்கப்பூரைத் திருப்பிப் பிடித்ததும் சிங்கப்பூரிலுள்ள வெளிநாட்டார் தமது உறவினர்களுக்குச் சுகந்தெரிவிக்க றேடியோவில் வசதியளிக்கப் பட்டது. அச்சமயம் இலங்கையிலுள்ள ஒவ்வொருவரும் றேடியோவைத் திருப்பிவைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் கணேஷனின்மனைவியும் ஒருத்தி.

ஜப்பானியரின் குண்டுக்கு இலக்கானவர்களின் வரிசையில் கணேஷனின் பெயரைக்கேட்டதும் ''அம்மா' என்றலறியபடியே மூர்ச்சித்து வீழ்ந்தாள் பாவம் அப்பெண். அவளைத் தேற்றப்பெற்ருேர் பட்டபாடு பெரியபாடு.

ஒரு மாத இல்லற வாழ்க்கையோடு கணவனைப் பிரிந்துவிட்ட பெண்ணின் தலைவிதியை நினைந்து அம்மா கண்ணீர் விட்டாள். அப்பா பிடிவாதமாக அவளை இன்னெருவனுக்குக் கொஞ்சம் பணத்தையும் சேர்த்துக்கட்டி வைத்தார். அழுதவள் சிரிக்க ஆரம்பித்தாள்.

முதலில் வெள்ளைக்காரர்கள் ஊர்திரும்பச் சிங்கப்பூர் அரசாங்கம் கப்பல்களை ஒழுங்குசெய்து கொடுத்தது. பின் இந்தியர்கள் இலங்கையர் திரும்பினுர்கள். அவர்களில் கணேஷும் ஒருவன். ஆம். றேடியோவில் வெளியான தகவல் தவருனது.

ஆவலோடு மனைவியைப் பார்க்க ஓடிச் சென்ருன் கணேஷ். திடீரென்று தன்முன்னுல் வந்து நிற்கும் கணவனைக்கண்டு அவள் எவ்வளவு ஆனந்தப்படுவாள் ...... இன்பமான கற்பனை உலகத்தில் சஞ்சரித்தபடியே மனைவியின் வீட்டினுள் நுழைந்தான். ஆம்; அவள் தான்.........

''கமலா'' என்றழைத்தபடியே கைகளை நீட்டிக் கொண்டு அவளை அணுகினுன் ஆசையோடு.

அவள் என்ன செய்திருப்பாள் பதில் கூறுங்கள்.

[உங்கள் பதில்களைச் சுருக்கமாக 5-3-61க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக 'நீங்களே பதில் சொல்லுங்கள். 'புதினம்' 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### நீகஙே்ள வழி சொல்லுங்கள்

**சென்ற கிழமை கதைக்குப் பதில்**

என்ற பகுதிக்கு நூற்றுக்கணக்கானவர்களிடமிருந்து பதில்கள் வந்திருக்கின்றன. அவற்றுள் ஆக்ச் சிறந்த பதில்கள் சிலவற்றைமட்டுமே பிரசுரித்திருக்கிருேம். இடவசதியின்மையால் எல்லா விடைகளையும் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிருேம்.

படகோட்டியின் மிருகத்தனமான ஆசைக்கு இணங்காமல் தானும் கடலில்குதித்து உயிர்நீத்தாள்

தன்னை, களபூமி, காரைநகர் கே. குஷிநாதன்,

மாசற்ற மனத்தோடு-உடலோடு படகோட்டியை முத்தமிடாமலே மாண்டாள் மங்கை.

நீர்வேலி, கு. தியாகராசசர்மா.

தன் மாங்கல்யம் நிலைத்திருக்கக் கணவனின் உயிர் முக்கியமென்று கருதிய அப்பெண் கடதாசிப் பூவை முகர்வதுபோல-உயிரற்ற பிணத்தை முத்தமிடுவதுபோல படகோட்டியின் துராசைக்கு இணங்கினுள்.

உடுப்பிட்டி, ச. விஜயலட்சுமி.

கட்டிய கணவனைக்காக்க படகோட்டியை முத்தமிட்டாள். நீரில் தத்தளித்த கணவன் அதைக்கண்டு பொருமல் வேண்டுமென்றே நீரில் மூழ்கி இறந்தான் கணவன் மாண்டுவிட்டதை அறிந்த அப்பெண் நொடிப் பொழுதில் காக்கைப் பாறையிலிருந்து நீரில் குதித்து உயிர் நீத்தாள்.

மட்டக்கிளப்பு, தி. சேகரன்.

படகோட்டியை முத்தமிட்டாலும் கணவனை அவன் காப்பாற்றுவானே என்ற சந்தேகம் அவளுக்கிருந்தது. ஆகவே அவள் முத்தமிட மறுத்தாள்.

மெயின்வீதி, திருகோணமலை. செ. புவனேஸ்வரி,

## 10 மைல் நீள ராட்சத நிழல்

ஆகக் கூடிய நீளமுள்ள உங்கள் நிழலை அதிகாலையிலேயோ அல்லது மாலையிலோ நீங்கள்பார்த்திருப்பீர்கள். அதுஎவ்வளவுநீளமிருக்கும்? மைல் கணக்கிலிருக்குமா? இல்லையென்றுதான் கூறுவீர்கள்.

ஜேமனியிலுள்ள ஹார்ஸ் மலையின் உச்சியில்ஒருவன் ஏறிநின்று தனது நிழலைப் பாரத்தானுனல் வழக்கத்தைவிடப் பல நூறுமடங்குகள் அதிகமாக அதுநீண்டு தெரிவதைக்காண்பான் இந்த அபூர்வக்காட்சியை ஒரு வருடத்தில் எட்டுமுறைமட்டும்-அதுவும் குறிப்பிட்ட ஒருநேரத்தில் மட்டும் காணமுடியும்.

கலிபோனியா, டயாப்லோ மலை உச்சியில் நின்று பார்த்தால் உங்கள் நிழல் சுமார் பத்துமையில் தூரத்துக்கு நீண்டிருப்பதைக் காண்பீர்கள். மூன்று மாதத்துக்கு ஒருமுறை மட்டும் இவ்வளவு பெரிய நிழல் விழக்கூடிய விதமான கோணத்தில் சூரியன் உதயமாகிறது. இப் பகுதியில் அக்காலத்தில் வாழ்ந்த சிவப்பு இந்தியர்கள் இவ்விதம் பத்துமைல் நீள நிழல் விழும்காலத்தில் பூசைகள் நிடாத்தி நடனமாடி அதையொரு புனித தினமாகக் கொண்டாடுவார்கள். இத்தினத்தில் அவர்கள் வேலைக்குச்செல்லாது ஓய்வெடுப்பார்கள்.

# சோதிடம் கேட்கிறீர்களா, சோதிடம்?

## பொய்யாகச் சொன்னவள் சிறைசென்ருள்!

சென்றபொதுத்தேர்தலின் போது திரு. பிலிப் குணவர்த்தனு கொழும்பு வாழைத் தோட்ட மைதானத்தில் ஒரு பிரசாரக் கூட்டம் நடத்தினுர். அச் சமயம் அவரது கிரகநிலையைக் கொண்டு சோதிடம் கணிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் கூட்டத்துக்கு வந்தவர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன.

அவரது கிரகங்கள் நல்ல நிலையிலிருப்பதால் அந்தமுறை அவரே பிரதமராவார் என்று பிரசுர சோதிடம் கூறியது. ஆனுல் அவரது முடிவுதான் எல்லோருமறிந்த விஷயமாகி விட்டதே!

இந்தமுன்கூட்டியே அதிர்ஷ்டம்கூறுபவர்கள்இருக்கின்ருர்களே, அவர்கள் முக்காலும் ஏமாற்றுப் பேர்வழிகள். எதையாவது கூறி ஆசை வார்த்தை காட்டி உள்ள பணத்தையும் செலவு செய்யத் தூண்டிவிட்டுவிடுவார்கள்.

இங்குமட்டுமல்ல உலகம் முழுவதும் இந்த மாதிரி முன் கூட்டியே அதிர்ஷ்டம் கூறுபவர்களிருக்கிருர்கள். சமீபத்தில் அமெரிக்கக் கோட்டில் ஒருபெண் ஏதோ குற்றஞ் சாட்டிக் கொண்டுவந்து நிறுத்தப்பட்டாள். இவள் முன் கூட்டியே அதிர்ஷ்டம் கூறுபவள். வழக்கின் முடிவில் நீதிபதி கூறினுர்:

''உனக்கு எவ்வளவு காலச் சிறைத் தண்டனை விதிப்பதாகக் குறித்து வைத்திருக்கிறேனென்பதை நீ சரியாகக் கூறினுல் உனக்கு விடுதலையளிக்கிறேன்''

''30 நாட்கள்''–அவள் பதிலளித்தாள்.

"இல்லை 25 நாட்கள் என்று நீதிபதி கூறினுர். அவள் சிறை சென்ருள்.

பிரான்ஸில் 35 ஆயிரம் குறிசொல்பவர்கள்இருக்கிருர்கள். இவர்களிடம் தினசரி ஒருலட்சம்பேர் சென்று குறிகேட்கிருர்கள் ஒரு முறை குறிசொல்ல இங்கு ஐந்து பவுண் வசூலிக்கிருர்கள்.

நடிகர் நடிகைகள், வியாபாரிகள் முதலியோர் பெருமளவில் ஜப்பானில் இவர்களை நாடிச் செல்கிருர்கள். இங்கு முழுநேரக் குறிசொல்பவர்கள் ஆயிரக்கணக்கிலிருக்கிருர்கள்.

### ஆங்கிலத் திரை உலகில்

# காதல் மன்னன் எரல் பிளின் சொந்த வாழ்வில் அவன் நடத்திய லீலைகள்!

மேல் நாட்டுத் திரைப்பட உலகை ஒரு கலக்குக் கலக்கிவிட்டு அகால மரணமடைந்த ஏரல்பிளினைப் பட ரசிகர்கள் இன்னும் மறந்திருக்க மாட்டார்கள். ஏரல்பிளின் நடித்த படமென்ருல் போதும் ஆண்களுக்கு டிக்கெட் கிடைக்காது. தியேட்டர்களிலுள்ள அத்தனை சீற்றுகளையும் யுவதிகள் ஆக்கிரமித்துக்கொண்டு விடுவார்கள். ஆரணங்குகளின் உள்ளங்களில் அழியாத இடத்தை பிடித்துக்கொண்டிருந்த ஏரல் பிளின் தன் சொந்த வாழ்க்கையில்எப்படியிருந்தான் என்பது பலருக்குத் தெரியாது. ஏரல்பிளளின் பெயரை முறைப்படி சொல்வதற்கு இரண்டு பிள்ளைகளைப் பெற்றுக் கொடுத்த அவனது இரண்டாவது மனைவி நோரா, எரலோடு, தான்வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றிக் கூறுகிருள்; படித்துப் பாருங்கள்.

## நடிகனின் மனைவி கூறும் பரிதாபக் கதை.

“ஸக்கா என்ற ஏரலின் உல்லாசப் படகில் நாங்கள் ஜமய்காவுக்குப் போனேம். இங்கு ஒரு படப் பிடிப்பு நடந்துகொண்டிருந்தது. இந்தப் படத்தை டைரக்ட் செய்த ஜேர்ஜேன்யீ இப்படத்தில் நடிப்பதற்கு ஒரு அழகிய இளம் பெண்ணைத் தேர்ந்தெடுத்திருந்தார். இந்தப் பெண் ஜமய்கன்—சீனப்பெற்ரேரின் கலப்பில் பிறந்தவள்.

### நடிகையுடன் காதல் லீலை

படப்பிடிப்பு ஆரம்பமாகி மூன்ருவது நாள். நான் எங்கள் படகின் கபினிலிருந்து வெளியே வந்தேன். மற்ருெரு புறமாக விருந்த இன்னெரு அறையைத் தற்செயலாகப் பார்த்தேன். அங்கே எனது அன்பான கணவரும் அந்த நடிகையும் உட்கார்ந்திருந்தனர். இருவர் முகங்களும் ஒன்றை ஒன்று நெருங்கிக்கொண்டிருந்தன. அந்தப் பெண்ணின் கண்கள் உணர்ச்சிப் பெருக்கால் அரைவாசி மூடியிருந்தன. அதற்குமேல் என்ன நடந்திருக்குமோ.

ஆத்திரத்தோடு சீறிக் கொண்டு உள்ளே சென்ற நான் எரலின் மூஞ்சையில் பளீர் பளீரென்று அறைந்தேன்.

அந்தச் சிறுக்கியைப் பார்த்து படகை விட்டு உடனே ஓடி விடும்படியும் மறுபடியும் தலை காட்டக் கூடாதென்றும் கத்தினேன்.

### ஓட்டமும் உதையும்

எரல் குடிவெறியிலிருந்ததால் அங்கு நிற்பது ஆபத்து என்று கருதி ஓட்டம் பிடித்தேன். எரல் என்னைத் துரத்திக்கொண்டு வந்தார். எதிர்பாராத விதமாக 'ஒரு கயிறு தடுக்கிவிட்டதால் அவர் வீழ்ந்து விட்டார். படகில் வேலை செய்பவர்கள் ஓடிவந்து அவரைத் தூக்கினுர்கள். அடிபட்டிருக்குமோ என்ற எண்ணத்தில் நான் திரும்பி எரலிடம் வந்தேன். அவர் கண்கள் ரத்தம் போல் சிவந்திருந்தன. நான் பேச முயலுமுன் அவர்களது பிடியிலிருந்து திமிறிக் கொண்டு என் கன்னத்தில் ஓங்கி அறைத்தார். நான் நிலை தடுமாறித் தலைகுப்புற வீழ்ந்தேன்.

### வெளியேற்றம்

மறுபடியும் என்னை உதைப்பதற்கு எரல் எழும்பிய போது அவரது மேற்கிந்திய 'அட்டேனி' உள்ளே நுழைந்தார். சமயத்தைப்பயன்படுத்திநான் மெல்ல நழுவிச் சென்று எனது சாமான்களைக் கட்டினேன். எவ்வளவு காலத்துக்குத்தான் இப்படி உதை வாங்குவது!

“நான் வாசலிலேயே உட்கார்ந்திருக்கப் போகிறேன். அவள் சாமான்களைத் தூக்கிக் கொண்டு வெளியே வரட்டும் ஒரேயடியில் மண்டையைநொருக்கி விடுகிறேன்” என்று எரல் கூறுவது என் காதில் வீழ்ந்தது. என் அதிர்ஷ்டம் அச்சமயம் பார்த்து எரலைப் பற்றி ஒரு கட்டுரை எழுத நியமிக்கப்பட்டிருந்த சராஹமில்டன் என்ற பெண் உள்ளே வந்தாள். நிலைமையைப் புரிந்துகொண்ட அவள் கிளாஸில் கொஞ்சக் குடிவகையை ஊற்றிக்கெகடுத்தாள். எரல் என்றுமே குடிவகையை வேண்டாமென்று கூறியதில்லை. ஆனுல் அந்தக் குடிவகையில் தூக்க மாத்திரைகளையும் சரா கலந்திருந்தாள். சிறிது நேரத்தில் உட்கார்ந்தபடியே எரல் தூங்கிவிட்டார். நான் மெல்லப் புறப்பட்டுச் சென்று ஹோட்டலில் போய்த் தங்கினேன்.

### மயக்கும் சக்தி

பெண்களை மயக்குவதில் எரலுக்கு நிகராக யாரையும் கூற முடியாது. மறுநாள் காலையில் டெலிபோன் மணியடித்தது. எரல்தான் பேசிஞர்:

“கண்ணே, நேற்றிரவு என்ன நடந்ததென்பதே எனக்கு நினைவில்லை திரும்பிவா...”

என் பெண்மனம் பேதலித்து விட்டது. உடனே திரும்பி அவரிடம் வந்துவிட்டேன்.

எரல் துணிச்சல் மிக்கவர். எப்பொழுதும் ஆபத்தை நாடிச் செல்லும் சுபாவமுள்ளவர். அவரோடு வாழ்வதே ஒரு பயங்கர அனுபவம். ஒருநாள் பேய்க் காற்று வீசியது. கடல் அலைகள் மலைபோல எழுந்தெழுந்து வீழ்ந்தன. என்னை முதுகிலே தூக்கிப் போட்டுக் கொண்டு கடலிலே நீந்திப் படகுக்குச் சென்ருர். என்னை எவ்வளவோ முயன்றும் பயன் ஏற்படவில்லை. கண்டித்துப் பேசினேன். வந்ததுவிட்டது ஆபத்து. ஒரு ஊசியில் தூக்க மருந்தைச் செலுத்தி' இதைக் கொஞ்சம் நீயும் போட்டுக் கொள்' என்று கூறியபடியே என்னை நெருங்கினுர். நான் வீடெல்லாம் சுற்றிச்சுற்றி ஓடி



விட்டுவிடும்படி நான் எவ்வளவோ மன்ருடியும் கேட்கவில்லை. ஆபத்தில் விளையாடுவது அவருக்கொரு பொழுது போக்கு.

### போடு, ஊசி!

தூக்கத்துக்கு ஊசி மருந்து போட்டுக்கொள்வது எரலுக்கு ஒரு பழக்கமாகவே போய் விட்டது. அதைத் தடுக்கநான் னேன். நான் உங்கள் மனைவி, உங்கள் குழந்தைகளின் தாய், நீங்கள் எனக்கு இப்படிச் செய்யக்கூடாது...... பரிதாபமாக மன்ருடினேன். 'முடியாது, நில். நீ ஊசி போட்டுத்தான் ஆகவேண்டும்! என்று கூறியபடியே என்னை வீழ்த்தி என் வயிற்றில் ஒரு காலை வைத்துக்கொண்டு ஊசி போட முயன்ருர்.

**எரலின் சித்திரவதைகளைத் தாங்கமுடியாத நோரா என்ன செய்தாள்? இவர்களுடைய தாம்பத்திய வாழ்வு நீடித்ததா? —இன்னும் அவள் கூறிய பல சுவையான சம்பவங்களை அடுத்த இதழில் படியுங்கள்!**

---

## அழகு ராணி - அழகுராசா போட்டி!

இந்தப் போட்டியைப் புதுமையான முறையில் நடத்துகிறேம். ஆண்கள் அழகு ராணியையும், பெண்கள் அழகுராசாவையும் இந்தியன் இங்கினுல் வரைந்து அனுப்புங்கள். வர்ணம் தீட்டக்கூடாது.

படத்தின் அளவு 8" × 4" ஆக இருக்க வேண்டும், போட்டி முடிவு திகதி 10-7-61. சிறந்த அழகு ராணியை வரைந்தவருக்கு ரூ. 15 பரிசு கிடைக்கும். அதே போல் அழகு ராசாவை வரைந்த பெண்ணுக்கும் ரூபா 15 கிடைக்கும், பரிசுபெற்ற படங்கள் புதினத்தில் வெளியிடப்படும்

நீங்கள் வரைந்த படங்களை, அழகுராணி-ராசா போட்டி, 'புதினம்' 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கீழே உள்ள கூப்பனுடன் அனுப்புங்கள்:

**அழகுராணி — அழகுராசா போட்டி!**

படம்வரைபவர் பெயர்: ..............................

..............................

முகவரி ..............................

..............................

..............................

---

பெண்கள் ஆண்களை மயக்கவா அல்லது பெண்களைப் பொருமைகொள்ளச் செய்யவா அழகாக ஆடை அணிகிருர்கள் என்ற விவாதம் சில வாலிபர் மத்தியில் கிளம்பியது. எல்லோரும் ஆண்களை மயக்கவே பெண்கள் அழகாக ஆடையணிகிருர்கள் என்ருர்கள். ஒருவன் துணிச்சலோடு கூறினுன்: “ஆடையில்லாத பெண்ணைக் கண்டால்தால் நான் மயங்குவேன்” என்று

Registered as a newspaper at the G. P. O.

புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

# சங்கதி தெரியுமா?

ஏரிவீட்டுத் தமிழ்த்தினசரியின் ஆசிரியர் குழுவில் அங்கம் வகிக்க அண்மையில் தெரிவுசெய்யப்பட்ட நால்வரில் ஒருவர்இப்போது நிராகரிக்கப்பட்டு விட்டார். அவர் ஒரு புரட்சிவாதியென யாரோ எழுதிய மொட்டைக் கடதாசி ஏரிவீட்டாரைத் திகிலடையச் செய்து விட்டதாகச் சிலரும் அவருடைய உடல் நலம் உத்தியோகத்துக்கு ஏற்றதாயில்லையெனச் சிலரும் பேசிக்கொள்கிருர்கள்.

*      *

தற்காலிக காணி மந்திரி முதியான் சே. தென்னக்கூன் யாழ்ப்பாண எம். பி. யின் விருந்தினராக வந்து அவரது தொகுதியில் ஒரு நாள் சுற்றுப் பிரயாணம் செய்தாரல்லவா? உத்தியோகப்பற்றில்லாத இந்த வருகைக்கு அடிப்படையாகவுள்ள சங்கதி என்ன?

அழைப்பாளர் துரையப்பாதன்னை அதிகம் வெளிக்காட்டிக்கொள்ளாது மறைந்து நின்று காரியம் பார்த்ததேன்? அமைச்சருக்கு திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் மாலை சூட்டச் செய்த சங்கதி யாருக்காவது தெரியுமா?

*      *

மலையாளத்துக்கு இரு தடவை யாத்திரை செய்து கெஞ்சிக் கூத்தாடிய தன் பயனுக இந்த ஆண்டு 770 கண்டி புகையிலையை ஏற்றுமதி செய்ய யாழ்ப்பாணம் புகையிலைச் சங்கம் அனுமதி பெற்றுவிட்டது. ஆனுல் அனுப்புவதற்குப் போதியளவு புகையிலை அகப்பட மாட்டேன் என்கிறதாம். உள்ளூரில் அதிககிராக்கியிருப்பதால் சங்கத்திற்கு எதற்குப் புகையிலையைக் கட்டிக்காவவேண்டு மென்கிருர்கள் கமக்காரர்கள்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் காரியதரிசிக்கு அங்கத்தவர்கள் சிலர் எச்சரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பி அடிப்படைக் கொள்கையை மாற்ற வேண்டாம் என வலியுறுத்தியிருக்கிருர்கள். திரு. கி. ஆ. பெ. விசுவநாதத்துக்கு வரவேற்பு வைத்தது, தலைமைப் பதவியை மாற்றச் சதிசெய்தது என்பன அவர்மீதுள்ள குற்றச் சாட்டுகளில் சிலவாகும்.

*      *

புதுக்குடியிருப்பில் சமீபத்தில் நடந்த காணிப் பங்கீட்டின்போது ரோட்டோரமாக உள்ள காணித் துண்டுகளை யாருக்கும் கொடுக்க வேண்டாமென்று மேலதிகாரி தடுத்து நிறுத்திய சங்கதி தெரியுமா? அந்தக் காணிகள் யாருக்கு வழங்கப்படும் என்பது இரகசியப் பைல் ஒன்றுக்குமட்டுமேவெளிச்சம்!

*      *

காதல் கேளிக்கைவிடுதியாக மாறிவிட்ட மருத்துவ தாதிகள் இல்லம் எங்கே இருக்கின்றதென்பது யாருக்காவது தெரியுமா? அங்கு பகல் இரவென்று பாராது பல்லிழித்து நிற்பவர்கள் பட்டியல் ஒன்றைத் தரவேண்டுமா? மானம் கப்பலேறுவதைக் கண்டு விடுதியை விட்டு வெளியேறிய தாதிகள் பெயர் தெரியுமா?



உலகிலேயே பிரிட்டிஷ் பெண்கள்தான் மிக அழகான கால்களை உடையவர்கள் என்று சமீபத்தில் ஒருவன் லண்டனில் கூறினுன். இவன் கால்மேஸ் செய்யும் கம்பனியைச் சேர்ந்தவன். பிரிட்டிஷ் பெண்களின் கால்களை உலகிலுள்ள எல்லோருமே பார்ப்பதற்குச் சந்தர்ப்பமிருக்கிறது. ஆனுல் கீழைத்தேசப் பெண்களின் கால்களைப் பார்ப்பது வெகு அபூர்வம். இந்தநிலையில் பிரிட்டிஷ் பெண்களின் கால்கள்தான் அழகானவை யென்று இவனுல் எப்படிக் கூற முடிந்ததோ?

மேலே இருப்பவள் ஒரு வெள்ளைக்காரி. உல்லாசச் சுற்றுப்பிரயாணத்தில் இலங்கைவந்துள்ள இவளை நமது புகைப்படக்காரர் தமது கமராவுக்குள் அகப்படுத்திக் கொண்டார். கொழும்புக் கடற்கரையில் காற்றுவாங்கும் இவளின் கால்கள் காட்சிப் பொருள்கள்தான். என்செய்வது நம்நாட்டுப்பெண்கள் அப்படியல்லவே......

## மணப்பெண்ணின் கையில் விலங்கிட்ட கணவன்

அயோவா டெஸ்மொயின்ஸ் என்ற இடத்தில் ஒரு கல்யாணம் நடந்தது. விவாகம் நடப்பதற்குச் சிறிது நேரத்துக்கு முன் மாப்பிள்ளையை யாரோ டெலிபோனில் கூப்பிட்டார்கள்.

''ஹலோ'' ... உமக்குக் கல்யாணம் நடந்த சிறிது நேரத்துக்குள் உமது அழகான மனைவியை நான் கட்டாயம் கிளப்பிக்கொண்டு போய்விடுவேன். ஜாக்கிரதை...''

மாப்பிள்ளை திகைத்துவிட்டான். 'நடப்பதுநடக்கட்டும்' என்று அலட்சியமாயிருக்கவும் அவனுல் முடியவில்லை.

விவாகச் சடங்குகள் முடிவடைந்தஉடனேயே மனைவியைப் பக்கத்தில் அழைத்துக் கையை நீட்டச்சொன்னுன். அவன்ஒன்றும் புரியாமல் கையை நீட்டினுள். சட்டைச்சாக்கில் தயாராய் வைத்திருந்த விலங்கை எடுத்து அவளது கையையும் தன் கையையும் சேர்த்து மாட்டிப் பூட்டினுன்.

திருமணத்துக்கு வந்திருந்தவர்கள் விஷயம் புரியாமல் விழித்தனர். அதைப்பற்றி அவன் பொருட்படுத்தவில்லை; 'ஹனிமூன்' சென்று திரும்பும்போதுதான் அவன் விலங்கைக் கழற்றி அவளை விடுதலை செய்தான்.

வரதர் வெளியீடு:

### சைவ பாடப் பயிற்சி

சமயபாடப் பரீட்சையில் சித்தியடைவதற்கு மிக உதவியான பயிற்சி நூல்கள்

| | | |
|---|---|---|
| சைவ பாடப் பயிற்சி—நான்காம் வகுப்பு | சதம் | -80 |
| சைவ பாடப் பயிற்சி—ஐந்தாம் வகுப்பு | ,, | -90 |
| சைவ பாடப் பயிற்சி—ஆரும் வகுப்பு | ரூபா | 1-00 |
| சைவ பாடப் பயிற்சி—ஏழாம் வகுப்பு | ,, | 1-10 |
| சைவ பாடப் பயிற்சி—எட்டாம் வகுப்பு | | அச்சில் |

விற்பனையாளர்: ஆனந்தா அச்சகம் — புத்தகசாலை,
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச. வரதராசன்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348. தந்தி: 'அச்சகம்'